விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 20 புதன்கிழமை (03.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 135

தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

## வடக்கு - கிழக்கு இணைப்புடன் சமஷ்டி முறையான சுயாட்சி அவசியம்

### வடக்கு முதலமைச்சர் வலியுறுத்து



(மன்னார்)

வடக்கு - கிழக்கு இணைப்புடன் சமஷ்டி முறையிலான சுயாட்சி எமக்கு அத்தியாவசியமானது என தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவை வழங்கப்படாது விட்டால் நிரந்தர அரசியல் தீர்வு என்பதற்குள் வர முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (23-ம் பக்கம்...)

### வீட்டினுள் புகுந்து
## வயோதிபர்களை தாக்கி பணம், நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சித்தன்கேணி பகுதியில் உள்ள வீடொன்றில் நுழைந்த சிலர் அங்கிருந்த இரு வயோதிபர்களை தாக்கி வீட்டில் இருந்த பெறுமதியான பணம், நகை மற்றும் பொருட்களை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது காயமடைந்த இரு வயோதிபர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இச் சம்பவ 23

## 68-வது நாளாக தவிப்பு




04

## இளைஞன் மீது வாள்வெட்டு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நவாலிப் பகுதியில் உள்ள கடையொன்றினுள் வாள்களுடன் வந்த இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டதில் கடையில் பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் மே தினத் 23

## குப்பைகளை அகற்றிய ஜனாதிபதி



02

## தாயும் மகளும் வெட்டிக் கொலை

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை - ஹுங்கம, குருபொக்குன பிரதேசத்தில் தாயும் மகளும் கூரிய ஆயுதங்களால் வெட்டிக்கொலை 24

## 6 பேருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பகுதியில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கஞ்சாவுடன் கைதாகி விளக்கமறியலில் உள்ள 6 சந்தேக நபர்களை அவர்களின் குடும்பங்களின் பரிதாப நிலை கருதி பிணையில் செல்வதற்கு அனுமதித்த யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் 23

## இருநூறு கிலோ கேரளகஞ்சா மீட்பு

(கற்பிட்டி)

வில்பத்து சரணாலயத்திற்கு அருகில் உள்ள பிரதேசத்தில் இருந்து 200 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் 3 பேர் 02

### சுமந்திரன் மீதான கொலை முயற்சி
## முன்னாள் போராளிகள் பழிவாங்கப்படுகின்றனர்
### பிணை மனு நேற்றுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கொலை செய்ய திட்டம் தீட்டியதாக கூறப்படுவது முன்னாள் போராளிகளை பழிவாங்குவதற்கான நோக்கம் மட்டுமே என தெரிவித்து சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் நேற்றைய தினம் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை 23

### கடற்படையினரால் மீட்கப்பட்ட
## 30பேரும் தடுப்பில் வைக்கப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் தத்தளித்து கொண்டிருந்த நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்ட 32 பேரில் மியன்மார் நாட்டை சேர்ந்த 30 புகலிட கோரிக்கையாளர்களை நுகேகொட மிரிஹானை தடுப்பு முகாமில் வைக்குமாறு உத்தரவிட்ட மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் கருணாகரன்,

ஏனைய இரு இந்தியர்களையும் சட்டமா அதிபரின் உத்தரவு கிடைக்கும் வரை தடுத்து வைக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி 23

## பொதுஜன முன்னணி ஒருமித்து போட்டி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் கூட்டு எதிர்க்கட்சி ஆகியன தேர்தலில் ஒன்றாக போட்டியிடும் என பொதுஜன 04

## மின்சார தேவை அதிகரிப்பு!

(கொழும்பு)

வரட்சியான காலநிலையால் மின் விநியோகத்திற்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி 24

## தேர்தலை நடத்தாவிடின் முற்றுகைப் போராட்டம்
### ✸ மகிந்த அணி எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத்தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்தாவிட்டால், பாரிய மக்கள் வெள்ளத்தை கொழும்புக்கு கொண்டுவந்து, முற்றுகைப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மே தினக் கூட்டம் தொடர்பில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற மகிந்த அணியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே 24

### கணவன் மரணம்
## பிரிவை தாங்காது மனைவி உயிரிழப்பு

(பூநகரி)

வட்டக்கச்சியைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண்ணொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் வீட்டினுள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வட்டக்கச்சியைச் சேர்ந்த கவிதா கலைச்செல்வன் (வயது28) என்ற இளம் குடும்பப் பெண்ணே நேற்று முன்தினம் முதலாம் திகதி அதிகாலை வேளை தூக்கில் 23

## பேஸ்புக் குறித்து 1,100 முறைப்பாடு

(கொழும்பு)

கடந்த நான்கு மாதங்களில், சமூக வலைத்தளங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில், சுமார் ஆயிரத்து 23

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(பி-8437)

## இருநூறு கிலோ...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் கற்பிட்டி காவற்துறைக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இடம்பெற்ற சுற்றிவளைப்பில் இந்த கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

வில்பத்து சரணாலயத்திற்கு அருகில் கொலன்கந்த பிரதேசத்தில் இரண்டு மரங்களில் வைக்கப்பட்டிருந்த 7 பைகளில் இந்த கேரள கஞ்சா இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 45, 32 மற்றும் 29 வயதானவர்கள் என தெரிவிக்கப்பட்டதுடன் அவர்கள் கற்பிட்டி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் சந்தேக நபர்கள், இன்று புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (செ-11)

## வேலையாள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தென்னந் தோட்டத்தை பொறுப்பாக பராமரிப்பதற்கு வயதான ஒருவர் தேவை. (C-8450)

தொடர்புகளுக்கு:- 0771681697

## மணமகள் தேவை

இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 1983ஆம் ஆண்டு பிறந்த சுயதொழில் செய்யும் பூர நட்சத்திர மணமகனுக்கு மணமகள் தேவை.

பாவம்- 77, செவ்வாய் - 8 இல் (8800)

தொடர்புகளுக்கு - 077 254 3119

## குப்பைகளை!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கெட்டம்பே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றிருந்த நிலையில்,

கண்டி கெட்டம்பே மைதானத்திற்கு நேற்றைய தினம் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்கள் இணைந்து குப்பைகள் காணப்பட்ட மைதானத்தை சுத்தப்படுத்தியுள்ளனர். (செ-11)

மகளிர்க்கான பயிற்சி வகுப்புக்களின் புதிய பிரிவு ஆரம்பமாகின்றது

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள் வகுப்புக்களாக, பணி புரிவோர், உயர்கல்வி மாணவியர் மற்றும் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய வகையில் நடைபெற உள்ளன

6 .5. 2017 காலை 10 மணிக்கு

ஃபேஷியல், மணப்பெண் ஒப்பனை கூந்தல் தொடர்பான பயிற்சி உடையமைத்தல் (வாரநாள் வகுப்பு)

விரைவில் கேக் ஐசிங் வகுப்பு ஆரம்பமாகும்

இரண்டு மாதங்கள் கொண்ட மேற்படி பயிற்சிகளை பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்

தூரிகை
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி
077 525 9954
(C-8448)



மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்

Best Wishes

## திருமதி க. செல்வமலர்

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் பரந்த மனதுடன் சேவை நோக்குடன் சோர்வற்றவராய் - என்றும் சுறுசுறுப்புடன் அனுபவ முதிர்ச்சியே வெற்றியின் இரகசியமாய் என்றென்றும் மாறாச் சிரிப்புடன் அனைவர் உள்ளத்தையும் வென்றெடுத்த "செல்வமலர்" இன்று போல் என்றும் மகிழ்ச்சியுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

உத்தியோகத்தர்கள்
விடு. இல - 06, யாழ்.போதனா வைத்தியசாலை
(8902)

இன்று மணிவிழாக்காணும் மாண்புறு ஆசிரியை திருமதி வாசுகி பரமநாயகம் அவர்களின் சேவைக்குத் தலை வணங்குகின்றோம்

35 வருட சேவையில்

| | | |
|---|---|---|
| 1. திரு/பட்டித்திடல் G.T.M.S | 26.04.1982 – 20.01.1985வரை | |
| 2. யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | 21.01.1985 – 31.12.1986வரை | |
| 3. திரு/கோணேஸ்வரா வித்தியாலயம். | 01.01.1987 – 14.08.1989வரை | |
| 4. யா/புனித அன்ரனிஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை | 15.08.1989 – 28.02.1991வரை | |
| 5. யா/கலாநிதி தியாகராஜா ம.ம.வித்தியாலயம் | 01.03.1991 – 14.02.2001வரை | |
| 6. யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் | 15.02.2001 – 31.08.2008வரை | |
| 7. யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம் | 01.09.2008 – 02.05.2017வரை | |



திருமதி வாசுகி பரமநாயகம்

ஓய்வுக் காலத்திலும் தம் இறைபணி தொடரவும் நிறை வாழ்வு வாழவும் வாழ்த்தும்

யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய குடும்பம்

மணிவிழா நாளில் பணிநயந்து வாழ்த்துகின்றோம்



## திரு. சுப்பிரமணியம் நடராசா (SLPS I)

(அதிபர், கிளி/இராமநாதபுரம் ம.வி.)

| சேவை நிலையம் | சேவை | காலம் |
|---|---|---|
| கிளி/பன்னங்கண்டி இ.த.க.பா. | ஆசிரியர் | 05.01.1990 - 08.03.1993 |
| ஆசிரியர் கலாசாலை | ஆசிரியர் | 09.03.1993 - 01.04.1995 |
| கிளி/பன்னங்கண்டி இ.த.க.பா. | ஆசிரியர் | 02.04.1995 - 14.06.1999 |
| கிளி/ பன்னங்கண்டி இ.த.க.பா. | க.நி.அதிபர் | 15.06.1999 - 13.12.2001 |
| கிளி. பன்னங்கண்டி இ.த.க.பா. | SLPS | 14.12.2001 - 08.01.2002 |
| கிளி/அழகாபுரி வித்தியாலயம் | SLPS | 09.01.2002 - 02.07.2015 |
| கிளி/இராமநாதபுரம் ம.வித்தி. | SLPS | 03.07.2015 - 01.05.2017 |

கிளிநொச்சி மண்ணில் 27 ஆண்டுகள் கல்விப் பணியாற்றி ஓய்வுபெறும் எமது அதிபர் திரு. சுப்பிரமணியம் நடராசா அவர்களது பணியைப் பாராட்டுவதோடு அவரது ஓய்வுக்காலம் சிறக்க எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
(C-8449)

# புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற அனைவரும் கைகோர்க்க வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் அழைப்பு



(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அழைப்பு விடுத்துள்ளார்.**

கொழும்பு, கெம்பல் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை கட்டியெழுப்பி முன்னோக்கி கொண்டு செல்ல வெளிநாட்டு முதலீடுகள் அதிகமாக தேவைப்படுகின்றது.

அரச சொத்துக்களை வழங்காது. முதலீடுகளை பெற்றுக்கொள்ள மாற்று வழி இருந்தால் அது தொடர்பிலும் நிச்சயமாக அவதானம் செலுத்த வேண்டும்.

இந்த பயணத்துக்கு நாட்டு மக்களும் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும். கடந்த காலத்தில் பலர் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டமை அனைவரும் அறிந்த ஒரு விடயமே.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாங்கள் உருவாக்கிய நல்லாட்சி அரசில் தான் இவற்றுக்கான நிவாரணங்களும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு இன்னும் நிறைவேற்றவேண்டிய பல விடயங்கள் நாட்டில் காணப்படுகின்றன. அந்த வகையில், புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவது அத்தியாவசியத் தேவையாக காணப்படுகின்றது.

மேலும், அதிகார பகிர்வு, புதிய தேர்தல் முறை போன்ற முக்கிய விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடமையை நிறைவேற்ற நாட்டு மக்களும் எம்முடன் கைகோர்த்து செயற்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தலுக்கு அச்சப்படும் நல்லாட்சி அரசாங்கம்

## தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டு



நல்லாட்சி அரசாங்கம் தேர்தலுக்கு அஞ்சுகின்றது என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தலங்கமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மே தினக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உழைக்கும் மக்களின் அனைத்து உரிமைகளையும் நல்லாட்சி அரசாங்கம் முடக்கி வருகின்றது.

தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் நிச்சயம் தோல்வி ஏற்படும் என்பதனை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது.

தேர்தல் நடத்தினால் அரசாங்கத்தின் மெய்யான முகம் வெளிப்பட்டு விடும் என்ற காரணத்தினால் தேர்தல்களுக்கு அரசாங்கம் அஞ்சுகின்றது. இந்த நல்லாட்சி அரசாங்கத்திற்கு நீண்ட ஆயுள் கிடையாது.

இந்த நாடே துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்து வருகின்றது. பிரதேச சபைகள் இன்று பாரிய குழப்பங்களுக்கு உள்ளாகியுள்ளன.

முடிந்தால் அரசாங்கம் தேர்தலை நடத்தி வெற்றியீட்டிக் காண்பிக்கட்டும் என தினேஷ் குணவர்த்தன அரசிற்கு சவால் விடுத்துள்ளார். (இ-7)

# தேசிய தேர்தலில் மைத்திரி - ரணில் அரசாங்கம் வெற்றிபெறுவது சிரமம்

நாட்டில் தற்போது காணப்படும் நிலைமைக்கு அமைய தேசிய தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவது குறித்து மைத்திரி - ரணில் அரசாங்கம் எண்ணிப் பார்ப்பதும் சிரமமானது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

காலிமுகத் திடலில் நடந்த கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டம் தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில் எழுதியுள்ள குறிப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

காலிமுகத் திடல் கூட்டம் அரசியல் நிலைப்பாடு ஒன்றை தெளிவுபடுத்தியுள்ளது. அரசாங்கத்தின் இருப்புக்கு சிங்கள பௌத்த மக்கள் இடையிலான அரசியலில் ஆதரவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகியுள்ளது.

தேசிய மட்டத்திலான தேர்தல் ஒன்றில் வெற்றி பெறலாம் என்று மைத்திரி - ரணில் அரசாங்கம் நினைக்குமாயின் மேலும் வலுவடைந்து தமிழ், சிங்கள கட்சிகளின் ஆதரவை முழுமையாக பெற வேண்டியது அவசியம்.

இதன் ஊடாகவும் பெரும்பான்மையான வாக்குகளை பெறக் கூடிய வாய்ப்புகள் குறைவு. தேர்தல் வன்முறை, கள்ள வாக்குகள் மூலம் வெற்றி பெற்றாலும் அது அரசியல் நெருக்கடிக்கு வழி வகுக்கும்.

இது ராஜபக்ஷவின் மீண்டும் ஆட்சிக்கு வருவதை விட பாரதூரமான நிலைமையாக மாறும். எவ்வாறாயினும் ராஜபக்சஷவினருக்கு மாற்றாக ஒரு சக்தியை தென் பகுதியில் உருவாக்குவது தற்போது எந்த வகையிலும் சாத்தியமாகாது எனவும் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தனது முகநூலில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# தாயை தாக்கிய மகன் 4ம் திகதிவரை மறியலில்

தனது தாயை கடுமையாக தாக்கிய மகனை நாளை 4ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கம்பஹா மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வெலிவேரிய தெற்கு எம்பரலுவ பிரதேசத்தில் ஏற்பட்ட காணிப் பிரச்சினையில், 74 வயதான தாயை கீழே தள்ளி மகன் கடுமையாக தாக்கியுள்ளார்.

30 வயதுடைய மதுசங்க சமத் என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான மூன்று பிள்ளைகளின் தாயார் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். தாக்குதல் காரணமாக அவரது கண்ணில் காயம் ஏற்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகன் தாயை தாக்கிய சந்தர்ப்பத்தில் அவரை காப்பாற்றுவதற்கு சென்ற மற்ற இரண்டு சகோதரர்களும் இவரை கடுமையாக தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# பட்டதாரிகளின் போராட்டம் தொடர்கிறது

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்க்கமான முடிவை அறிவிப்பார் என தாம் நம்புவதாக மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக 71 வது நாளாக நேற்றும் பட்டதாரிகள் தங்களது போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே பட்டதாரிகள் மேற்கண்டவாறு கூறியிருந்தனர்.

தொழில் உரிமையினை வழங்குமாறு கோரி இரவு பகலாக இந்த போராட்டத்தில் பட்டதாரிகள் ஈடுபட்டு வருவதோடு, இதில் அநேகமானோர் பெண்களாக காணப்படுகின்றனர்.

தமது நியாயமான போராட்டத்தினை உணர்ந்து தங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் வருகைதந்து தங்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்த அதற்கான நடவடிக்கையினை எடுப்பதாக எதிர்க்கட்சி தலைவர் உறுதியளித்துள்ளார்.



இந்நிலையில், இரா.சம்பந்தன் மற்றும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமக்கான உறுதிமொழிகள் வாய்மொழி ரீதியாக இல்லாமல் செயற்பாட்டு ரீதியாக நடைபெறும் என தாங்கள் நம்புவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (இ-7)

# University of Jaffna – Sri Lanka

## Faculty of Management Studies & Commerce
## Master of Business Administration (MBA)
## Intake III – 2016/2017

**Extension of closing date for Applications**

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA) - 2016/2017 and invites applications for the admission from qualified candidates. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: ***http://www.maco.jfn.ac.lk/***

**ELIGIBILITY REQUIREMENTS**

A candidate seeking admission to an MBA should possess any one or more of the following qualifications and should demonstrate a satisfactory level of English language proficiency:

i. A degree from a recognized University / Higher Education Institution

OR

ii. A Postgraduate Diploma from a recognized University or Higher Education Institution/ Professional Institution with a minimum of one year post qualifying managerial/ relevant experience.

OR

iii. At least any one of the following professional qualifications with three years managerial/ relevant experience:

- Chartered institute of marketing (CIM) UK
- Associate member of Chartered Institute of Bankers (ACIB) UK
- Associate member of Chartered Institute of Bankers (AIB) Sri Lanka
- Chartered Institute of Management Accountants (CIMA)
- Chartered Institute of Personnel and Development (CIPD)
- Association of Chartered & Certified Accountants (ACCA)
- Chartered Accountants (CA) Sri Lanka
- Certified Management Accountant (CMA) Sri Lanka
- Institute of Engineers (CIE) UK/Sri Lanka
- Institute of Chartered Secretaries and Administrators
- At least a three year Higher National Diploma in Accountancy/ Management/ Marketing obtained from Ceylon Technical College/ Advanced Technical Institute/ Advanced Technological Institute, Sri Lanka, etc.
- Attorney – at – Law

OR

iv. Any other academic/professional qualification(s) obtained from a recognized University/ Institute with a minimum of three years of post qualifying experience acceptable to the board of study and the senate of the University of Jaffna.

**PROGRAMME STRUCTURE**

| | | |
|---|---|---|
| Structure | - | Semester based Course Unit System |
| Semester duration | - | Each semester extends for 20 weeks |
| Duration | - | Two years |
| Medium of instruction | - | English |

**COURSE FEE**

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 | Year 2 |
|---|---|---|
| Registration / Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

* Application Fees: LKR 2000/=

**The closing date for applications has been extended up to 12.05.2017**

**APPLICATION PROCEDURE**

Application form and Paying in voucher can be downloaded from the Faculty website at *http://www.maco.jfn.ac.lk/* or it can be obtained from MBA Office, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Duly completed applications should be forwarded to "Coordinator, MBA programme, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli" by registered post or submit it in person at the MBA Office, Faculty of Management Studies & Commerce on or before the closing date. Indicate "Application for MBA Programme" in the top left hand corner of the envelope.

More relevant information could be obtained through **021 221 6394**.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka** (C - 8447)

## படுகொலை # கடத்தல் # சுதந்திரம்

# ஊடகவியலாளர்கள் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஊடக சுதந்திர தினமான இன்று ஊடக சுதந்திரத்தை உறுதி செய்ய வலியுறுத்தியும், படுகொலை செய்யப்பட்டும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டும், தாக்குதல்களுக்கு உள்ளான ஊடகவியலாளர்கள் தொடர்பான நீதி விசாரணைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் யாழ்.ஊடக அமையத்தின் ஒழுங்கமைப்பில் இன்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக இன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு இந்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறும். முன்னதாக பிற்பகல் 2.30 மணியளவில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் ஞாபகார்த்த நினைவு தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலமாக யாழ்.மத்திய பேருந்து நிலையத்துக்கு பேரணியாக வருகை தரும் ஊடகவியலாளர்கள், அங்கு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இதன் போது தமது வாய்களில் கறுப்பு துணிகளை கட்டி தற்போதும் இலங்கையில் ஊடக சுதந்திரம் இல்லை எனவும், படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்ட, தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை எனவும் சர்வதேசத்திற்கு தெரியப்படுத்தும் வகையில் கவனயீர்ப்பு இடம்பெறவுள்ளது.

இந்த போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு யாழ்.ஊடக அமையம் அழைப்பு விடுத்துள்ளது. (செ - 4)

## 68வது நாளாக ...

வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலை வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் மேற்கொண்டு வரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 68ஆவது நாளாகவும் தொடர்கிறது.

கையளிக்கப்பட்ட தமது உறவினர்களை விடுவிக்கக்கோரியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும் மற்றும் அவசர காலச் சட்டத்தினை நீக்குமாறு கோரியும் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த போராட்டம் தீர்வு கிடைக்கும் வரை தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மருதங்கேணி, திருகோணமலையிலும் தொடர்ந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## பொதுஜன முன் ...

முன்னணியின் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இந்த இரண்டு கட்சிகளும் கை சின்னத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் போட்டியிடாது எனவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

காலி முகத்திடலில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தின் மூலம் தெளிவான செய்தி வெளியிடப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ள பீரிஸ் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளையே சுதந்திரக் கட்சி பின்பற்றி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ-11)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் இராஜலக்ஷ்மி



யாழ். அளவெட்டி, வேளாவையை பிறப்பிடமாகவும் திருகோணமலை நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் இராஜலக்ஷ்மி அவர்கள் 01.05.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் (CTB) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணசேகரம் (அளவெட்டி), தனசேகரம் (வானம் - அளவெட்டி), திருமதி வி.ஜெகதீஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, அளவெட்டி), Dr.சந்திரசேகரம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி துஷ்யந்தினி இராஜதுரை (ADE, உதவிக் கல்விப் பணிப்பாளர், திருகோணமலை), சேகரன் (கனடா), ஜெயந்தினி (திருகோணமலை), புவிசேகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மற்றும் இராஜதுரை (திருகோணமலை), ஜனாதினி (கனடா), சிவசாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திருமதி துஷிற்றா பவீந்தர் (லண்டன்), திருமதி தனுஷாஜினி ரஜீவன் (Acc.Asst. Tokyo Co.Plc), திருமதி மோகனராஜி பிரதீபன் (ஜேர்மனி), திஷா, ஷான், அர்வின் (கனடா), தினேஷ்குமார், தர்மசீலன், மாதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மற்றும் கேஞ்சயன் (லண்டன்), பிரன்றூஹரிஷ் (திருமலை), மகிஷ்பன் (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (04.05.2017) வியாழக்கிழமை இல.03, பிரதான வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை, கடற்கரை, இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.03, பிரதான வீதி,**
**திருகோணமலை.**

(8901)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**0263269343**

# கண்டியில் நடந்த சு.க. மேதினக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 2000 பேர் சென்றனர்



(கொழும்பு)

கண்டியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 2000 இற்கும் மேற்பட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் குடாநாட்டிலிருந்து 2000 இற்கும் மேற்பட்ட கட்சி உறுப்பினர்கள் சென்று பேரணியில் கலந்து கொண் டதுடன் அங்கு இடம்பெற்ற கூட்டத்திலும் பங்கேற்றிருந்தனர்.

50 இற்கும் மேற்பட்ட இ.போ.ச.பேருந்துகளிலும் 10 இற்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகளிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் காலை கண்டியைச் சென்றடைந்தனர். (இ-7)

# மகிந்தவின் கூட்டத்தில் சந்திரிகாவின் கணவர்




(கொழும்பு)

கூட்டு எதிரணியின் மே நாள் பேரணி நடைபெற்ற காலி முகத்திடல் பகுதியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவரான விஜய குமாரதுங்கவின் உருவப்படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி நேற்று முன்தினம் காலிமுகத்திடலில் பிரமாண்டமான மே நாள் பேரணியை நடத்தியிருந்தது.

இந்தக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவின் உருவப்படங்களுடன், சந்திரிகா குமாரதுங்கவின் கணவரான விஜய குமாரதுங்கவின் படங்களும் அருகருகாக வைக்கப்பட்டிருந்தன. (இ-7)



# மரண அறிவித்தல்

## பொன்னையா செல்வராசா

(இளைப்பாறிய எழுதுவினைஞர் - மன்னார் நானாட்டான் கச்சேரி)

பிறப்பு : 24.01.1943
இறப்பு : 30.04.2017

வரணி மாசேரியை பிறப்பிடமாகவும், கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்வராசா (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி-வள்ளியம்மை தம்பதிகளின் அன்புமருகனும், தவத்தின் அன்புக் கணவரும், இராசபூபதி, செல்வத்திரவியம், அருணாசலம், குலேந்திரராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும். செல்வம் (கட்டைவேலி நெல்.ப.நோ.கூ. சங்கம்), கண்ணன் (லண்டன்), வேணுகா (கொழும்பு), சாந்தி (லண்டன்), வித்தியா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாஸ்கரன், சாந்தினி (லண்டன்), ஜெயகாந்தன் (சென். ஜோசப் கல்லூரி - மருதானை), சுரேஸ் (லண்டன்), சுகந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வினோஜன், பானுஜா, சச்சின், சங்கீத் (லண்டன்), ஜனார்த்தனன், மாதங்கி (கொழும்பு), சுகாசினி, சாகித்தியன், சாணக்கியன் (லண்டன்) ஸ்ரீராம், சியாம் (ஜேர்மனி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.05.2017 இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணி யளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

T.P No :
077 691 2223

தகவல் :
குடும்பத்தினர்

(C-8845)

# இராசி பலன்

03.05.2017
(சித்திரை 20, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
அட்டமி பின்னிரவு 01.09 மணிவரை
பூசம் முற்பகல் 9.49 மணிவரை
சுபநேரம் 4.26-5.56 மணிவரை
இராகுகாலம்11.56-1.26 மணிவரை
பத்திரிகை சுதந்திர தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம் | | சந் |
| | | | ராகு |
| - | சனி | | குரு |

**மீனம்:** எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும், வியாபார விருத்தியுண்டு,பணத் தேவைகள் பூர்த்தியாகும், பிள்ளைகளின் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்:** மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** உறவினர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், தனவரவு திருப்திகரமாக அமையும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், பயணங்களால் பலன் கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், தனவரவு திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**தனுசு:** திட்டமிட்ட பணிகளில் சிறு தடை, தாமதங்கள் என்பன ஏற்படும், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படும், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.






யாழ். இந்தியத் துணைத் தூதரகமானது சர்வதேச நடன தினத்தை முன்னிட்டு நடத்திய சிறப்பு நடன நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், அவரது மனைவி ஸ்ரீமதி சாந்தி நடராஜன் ஆகியோர் வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த புகழ்பூத்த நடன ஆசிரியர்கள் கிராமிய கலைஞர் களின் வரவேற்புடன் அழைத்துவரப்படுவதையும் நடன நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

## இசை அரங்கம்

யாழ்ப்பாணம்–மருதனார் மடம் இராமநாதன் சங்கீத அக்கடமியின் முன்னாள் இசை விரிவுரையாளர் (1966-1974) மகா வித்துவான் ஏ.ஜி.ஜயாக்கண்ணு தேசிகரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் முகமாக இசை அரங்கம் இடம் பெறவுள்ளது. இவ் இசை அரங்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கே.கே.எஸ். வீதி பூநாரி மடத்தில் அமைந்துள்ள செல்வமஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் கர்நாடக சங்கீத உலகின் ஜாம்பவான் சங்கீத ரத்னாகர குரு நெய் வேலி சந்தான கோபாலனின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. இளைப்பாறிய சங்கீத பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆறுமுகம் நடராஜன் கலந்து கொள் ளவுள்ளார். நினைவுப் பேருரையினைஜயாக்கண்ணு தேசிகரின் பிரதான சிஷ்யை இளைப்பாறிய சங்கீத ஆசிரிய ஆலோசகர் கலாபூஷணம் , சங்கீத ரத்தினம் திருமதி ஞானகுமாரி சிவனேசன் நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)




## நல்லைக்குமரன் வெள்ளி மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சைவ சமய விவகாரக்குழுவின் 2017 ஆம் ஆண்டுக்கான நல்லைக்குமரன் 25 ஆவது வெள்ளி மலருக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்களை அனுப்பும் போது பின்வருவன வற்றை கருத்தில் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1. இடது பக்க மேல் மூலையில் நல்லைக்குமரன் மலர் 25 எனக்குறிப்பிட வேண்டும்.

2. கட்டுரைகள் 5-7 பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும்.

3. ஏற்கனவே நல்லைக் குமரன் மலரில் வந்த கட்டுரைகள், வேறு புத்தகங்களில் வந்த ஆக்கங்கள் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

4.முடிவுத் திகதி : 31.05.2017

5. ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி : பிரதம பதிப்பாசிரியர் ,நல்லைக் குமரன் மலர் 25,21/3A இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் , யாழ்ப்பாணம்.

6. மின்னஞ்சல் முகவரி : nallaikumaranmalar gmail.com

7. ஆக்கங்களை மின்னஞ்சல் மூலம் /இறுவெட்டுக்கள் மூலம் அனுப்புவது பெரிதும் வரவேற்கப்படுகிறது.

8.தங்களது முகவரிமற்றும் தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடத்தவறவேண்டாம் என யாழ். மாநகரசபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுத்தலைவருமானபொ.வாகீசன் அறிவித்துள்ளார். (இ

## சுந்தரகாண்ட மங்கல யக்ஞப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் - மருதனார் மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய சுந்தரகாண்ட மங்கல யக்ஞப் பெருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூர்த்தியடையவுள்ளது. தினமும் காலை, மாலை ஸர்க்க பாராயணங்களும் திரவிய ஹோம வழிபாடுகளும் இடம்பெற்று முற்பகல் 11.30 மணிக்கு ஆன்மீக உரையும் மதியம் ஒரு மணிக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்ரீராம பட்டாபிஷேக விழா இடம் பெறவுள்ளது. (இ-3)

## சித்திரா பௌர்ணமி பொங்கல்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ கும்பிமணல் முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த சித்திரா பௌர்ணமி பொங்கல் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு அபிஷேகத்துடன் இடம்பெறவுள்ளது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிரியைகள் ஆரம்பமாகின என்பது குறிப்பிடத்தக்கது. (இ-19)

## ஒருங்கிணைப்புக் கூட்டம் ரத்து

எதிர்வரும் 08.05.2017 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவிருந்த யாழ். மாவட்டத்திற்கான 2 ஆவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது, தவிர்க்க முடியாத காரணத்தால் இரத்துச் செய்யப் பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

## விஞ்ஞான டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கட்டுநாயக்கவில் உள்ள எந்திர தொழில் நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் கோரப் பட்டுள்ளன. ஜீ. சீ. ஈ (உயர்தர) பரீட்சையில் கணித பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

இந்த விண்ணப்பங்கள் ஜூன் மாதம் ஆம்2 திகதி முன்னர் அனுப்பப்படல் வேண் டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்களை ஏப்ரல் 28ஆம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம். அத்துடன் WWW.iet.lk என்ற இணையத் தளத்திலும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதி கார சபை ,சோம சுந்தரம் வீதி , சுண்டிக்குளியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் பெறலாம் என யாழ். மாவட்ட அலு வலகர் கி. கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (இ



கொடிகாமம் பெரிய நாவலடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீடும் கலைஞர் கௌரவிப்பும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஆலய முன்றலில் இடம்பெற்றது. கச்சாய் அ.த.க. பாடசாலை அதிபர் க. குணசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருத்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் கௌரவ விருந்தினராக இளைப்பாறிய வங்கி முகாமையாளரும் எழுத்தாளருமாகிய யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் கவிமணி த.ஆனந்தராசா (அன்னதாசன்), ஓய்வுபெற்ற பிரதி அதிபர் ஜ.சிவராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



ஜனநாயக தேசிய அமைப்பால் வடக்கு தெற்கு சங்கமிக்கும் மனித நேயம் என்னும் கருப் பொருளில் தொழிலாளர் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். நல்லூர் சங்கிலியன் தோப்பு பகுதியில் நடைபெற்றது. இதில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, பாராளுமன்ற உறுப்பினர் சத்துரு சேனாரட்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ. சோபிகர்)

36

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015 ஆம் ஆண்டுத் தேர்தலில் யாழ்ப்பாணம்- கிளிநொச்சித் தேர்தல் மாவட்டத்திற்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்கின்ற வேளையில் வேட்பு மனுவில் தவறிருப்பது கண்டறியப்பட்டது.

இலங்கைத் தமிழரக்கட்சி என வேட்பு மனுவில் எழுதப்பட்டி



## தமிழரசுக் கட்சியின் வேட்பு மனுவை நிராகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்ட போது

ருந்தது. உண்மையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்றுதான் அரசியல் கட்சியின் பெயர் பதிவாகி இருந்தது.

எனவே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்பதை இலங்கை தமிழரசுக் கட்சி என எழுதப்பட்ட தவறினால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்படுகின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் யாழ்ப்பாணச் செயலகத்தின் தேர்தல் திணைக் களத்தில் நடந்தபோது கூட்ட மைப்பின் வேட்பாளர்கள் அதிர்ந்து போயினர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் சார்பில் வடக்கு மாகாண சபையின் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா சம்ப வம் நடந்தபோது அங்கு பிரசன்ன மாகியிருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட் சியின் வேட்பு மனுவை நிராக ரிக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுத்தபோது, தேர்தல் திணைக்க ளத்தில் கடமையாற்றும் அதிகாரி ஒருவரின் கையடக்கத் தொலை பேசி எம். ஏ.சுமந்திரனிடம் கைய ளிக்கப்பட்டு அதிலிருந்து அவர் கொழும்பு தேர்தல் திணைக் களத்துடன் தொடர்பு கொண்டார்.

யாழ்ப்பாணச் செயலக தேர்தல் திணைக்களத்தில் இருந்து கொண்டு தொலைபேசி கதைப்பது சட்டத் திற்கு முரணானது என அங்கு கூடியிருந்த அரசியல் கட்சியினர் சட்டப் பிரச்சினையை கிளப்ப நிலைமை மோசமாகியது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்படுகின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அத்தகையதொரு நிராகரிப்பைச் செய்வது அழகல்ல என்று ஏனைய அரசியல் கட்சியினரும் நினைத்துக் கொண்டதால் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் ஒன்று என்றவாறு சத்தி யப் பிரகடனம் செய்து குறித்த வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கட்சியின் பெயரில் பிழை உண்டென்றபோது நெஞ்சில் ஈரம் காய்ந்த கூட்டமைப்பின் வேட்பா ளர்களுக்கு வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்ற செய்தி வெளிவந்தபோதுதான் நிம்மதி யாக இருந்தது.

வேட்பு மனுத்தாக்கல் ஒரு மாதிரியாக முடிந்து போனது. தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடிக்க லாயின. தேர்தல் பிரசாரக் கூட்டங் கள் ஆங்காங்கே ஏற்பாடு செய்ய ப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் காலம்தாழ்த்தி வெளியிடப்பட்டது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளி ப்படுத்தும் விடயங்கள் முன் மொழியப்பட்டிருந்தன. இதனை மக்கள் ஏற்றுக்கொண்டனர். எனி னும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தேர்தல் பிரசாரங்கள், சமூக வலைத்தளங்களின் கருத்து ரைப்புகள் முன்பு ஒருபோதும் இல் லாத அளவில் இலங்கைத் தமிழரக் கட்சிக்கு பயப்பீதியைக் கொடுத் தது.

2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி தேர்தல் நடை பெற்றது. தேர்தல் நடப் பதற்கு 48 மணித்தியா லங்களுக்கு முன்னதாக ஊடகங்களில் தேர்தல் பிரசாரங்கள் நிறுத் தப் பட்டன.

அதாவது 14.08.2015 உடன் பத்திரிகையில் தேர்தல் விளம்பரங்கள் பிரசுரிக்க முடியாது. எனினும் தேர்தல் சார்ந்த அறிவிப்புக்கள், அறிவு ரைகளைப் பிரசுரிப்ப தற்கு தடையிருக்க வில்லை.

இலங்கையில் தொகுதி வாரியாக தேர்தல் முறைமை முடிவுக்கு வந்து விகிதாசார பிரதி நிதித்துவமுறை நடை முறைக்கு வந்த பின்னர் வாக்களிப் பதில் தெளிவான விளக்கத்தை மக்கள் பெற்றுக் கொள்ள வில்லை என்பது உண்மை.

இதனால் செல்லு படியற்ற வாக்குகள் அதி கமாக இருப்பதை அவ தானிக்க முடியும்.

அரசியல் கட்சி அல் லது சுயேட்சைக் குழு வின் சின்னத்திற்கு எதிரே புள்ளடியிட்டு, அதன் பின்னர் விருப்பு வாக் கிற்கு புள்ளடியிடுவதே தேர்தலில் வாக்களிக்கும் முறை.

எனினும் இந்த வாக்களிப்பில் ஓர் எளிமையான விளக்கத்தைக் கொடுப்பதென்பது வாக்குச் சீட்டின் மாதிரியை காட்சிப் படுத்தி புள்ளடியிடும் முறை யைக் காட்டுவதாகும்.

இத்தகைய ஓர் எளிமை யான உதாரணத்தை வலம் புரிப் பத்திரிகை 16.08.2015 அன்று செய்திருந்தது.

வாக்களிப்பில் செல்லு படியற்ற வாக்குகளைத் தவிர் க்கும் பொருட்டு இந்தப் பணியை வலம்புரி செய்ததா யினும் அதுவே வலம்புரிக்கு மிகப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது.

### மாதிரி வாக்குச் சீட்டு
### பாராளுமன்றத் தேர்தல் - 2015
### யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | | |
| அகில இலங்கை தமிழர் மகாசபை | | |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | | |
| ஈழவர் ஜனநாயக முன்னணி | | |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | | |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | | |
| ஐக்கிய தேசியக் கட்சி | | |
| ஐக்கிய சோசலிச கட்சி | | |
| மக்கள் விடுதலை முன்னணி | | |
| ஜனசெத பெரமுன | | |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | |
| நவ சிஹல உறுமய | | |
| முன்னிலை சோஷலிச கட்சி | | |
| ஶ்ரீலங்கா மஹஜன பக்ஷய | | |
| சோசலிச சமத்துவக் கட்சி | | |
| சுயேட்சை குழு - 1 | | |
| சுயேட்சை குழு - 2 | | |
| சுயேட்சை குழு - 3 | | |
| சுயேட்சை குழு - 4 | | |
| சுயேட்சை குழு - 5 | | |
| சுயேட்சை குழு - 6 | | |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(வளரும்)

-புருசோத்தமன்-

# காணாமல்ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கமே பதில் கூற வேண்டும்

## மேதின உரையில் சிறிதரன் எம்.பி காட்டம்

(கிளிநொச்சி)


காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே? என்ற பதிலை அரசாங்கம் சொல்லியே ஆகவேண்டும். இனியும் இந்த அரசாங்கம் காலத்தைக் கடத்தும் செயற்பாட்டில் ஈடுபடக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கிளிநொச்சி மேதினநிகழ்வில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தமிழ்த் தேசிய மே தின நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி ஏ-9 வீதி வழியாக காணாமல் ஆக்கப்பட்டோரைச் சித்தரிக்கும் ஊர்தி பவனிகளுடன் ஊர்வலம் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் உள்ள பாண்டியன் பூங்காவில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி கலாரஞ்சினி தலைமையில் மே தினக் கூட்டம் இடம் பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அவர்களுக்கு மதிப்பளிக்கின்ற வகையிலே இன்றைய நாள் மே தினமாக உலகத்திலுள்ளவர்கள் அனைவரும் கொண்டாடுகின்றனர்.

இந்நிலையில் நாம் எமது காணாமல் ஆக்கப்பட்ட குடும்பத் தலைவர்களான தொழிலாளர்களை வெளிப்படுத்தி விடுதலை செய்யுமாறு கோரி நிற்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே என்று வெளிப்படுத்துங்கள் என பொறுப்புள்ள அரசிடம் வேண்டி நிற்கின்றோம். முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் இறுதி நாட்களில் உறவினர்களின் கண்முன்னேயும் ஏனையோரின் கண் முன்னேயும் அரச படைகளால் கூட்டிச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைஎங்கே அடைத்து வைத்துள்ளீர்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? என வெளிப்படுத்துங்கள் என இந்த நாட்டின் இறைமையுள்ள அரசிடம் கேட்டு நிற்கின்றோம்.



எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை, எவரையும் நாம் பிடித்துச் செல்லவில்லை, எவரும் எம்மிடம் சரணடையவில்லை என பொறுப்புள்ள இந்த அரசாங்கம் பதில் சொல்ல முடியாது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை இராணுவம் விசாரித்துவிட்டு விடுகிறோம் என அழைத்துச் சென்றபோது அவர்களுடன் கூட வந்த உறவினர்கள் சாட்சியாகவுள்ளார்கள். இதற்கு சரியான பதில் சொல்லாமல், இதற்குரிய தகுந்த பொறுப்பான தீர்வினைக் காணாது யாரும் தப்பிக்க முயலக்கூடாது.

இந்த நாட்டு இறைமையுள்ள நாடு என்று சொல்லப்படுகின்றது. சிங்கள மக்களுக்குள்ள அதே இறைமையும் உரிமைகளும்தான் தமிழ்மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

யாரும் காணாமல் ஆக்கப்படவில்லை என்று இந்த அரசாங்கம் இனியும் பொறுப்பற்ற வகையில் பதில் சொல்ல முயலக்கூடாது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளை வெளிப்படுத்துமாறு கோரி கடந்த எழுபத்தொரு நாட்களாக இந்த வீதிக் கரையில் இரவு பகலாக போராட்டத்தை நடத்தி வருகின்றபொழுது இந்த அரசு உண்மையான ஜனநாயக தர்மங்களை நேசிக்கின்ற, அதன் அடிப்படையில் ஆட்சி நடத்துகின்ற அரசாக இருந்தால் இந்த ஜனநாயகப் போராட்டத்திற்குரிய சரியான பதிலை விரைவாகச் சொல்லியேஆகவேண்டும்எனஅவர் மேலும் தெரிவித்தார். (2-5)

# பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் 8 ஆவது அமர்வு மன்னாரில் நடைபெற்றது



பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் 08 ஆவது அமர்வு கடந்த மாதம் 28ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன் தலைமையில் சபையின் உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன்மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த அமர்வில் பல விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது. அந்த வகையில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்துகளுக்கான நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக பரிசீலனை செய்வதற்கான உள்ளூராட்சி ஆணையாளர் எம்.பற்றிக் நிரஞ்சன் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழுவிற்கு எவ்விதத்தில் குறித்த விசாரணைகளை மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் அமைச்சர் ஆலோசனை வழங்கியதாகவும், அத்தோடு விரைவாக அங்கு காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதிகாரசபையின் தலைவருக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதனைத்தொடர்ந்து வவுனியா மத்திய பேருந்து நிலையம் மீள இயங்க வைப்பது தொடர்பாகவும், வடக்கில் 60:40 என்ற விகிதாசார அடிப்படையில் பேருந்து சேவைகளை வழங்குவதற்கான இணைந்த நேர அட்டவணை அமுல்படுத்தல் தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்கான ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை வர்த்தமானி பிரசுரத்திற்கு அனுப்பி வைப்பதற்கான பணிப்புரையை அமைச்சர் செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

அதேவேளை அதிகார சபைக்கான 63 புதிய ஆளணிகளை நியமிப்பதற்கான ஆளணி முகாமைத்துவ சேவையின் அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான ஆளணிகளை தெரிவு செய்வதற்கான சேவைப்பிரமாண கோவையின் அடிப்படையிலான நியமங்கள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை உரிய நடவடிக்கைகளுக்கு அனுப்புமாறும் பணித்ததோடு, ஆட்டோக்களை அதிகார சபையின் கீழ் பதிவு செய்வதற்கான ஒழுங்கு விதிகளை விரைவாக தயாரிக் குமாறு அதிகார சபையின்தலைவருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (2-5-281)

## சிறந்ததொரு அரசியல் தலைமை அவசியம்

# தமிழீழ விடுதலைப் புலிகளே கூட்டமைப்பை உருவாக்கினர்

### மாகாணசபை உறுப்பினர் தியாகராசா தெரிவிப்பு



தமிழ் தேசியக் கூட்டமைப்பு தடம் புரள்வதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.தியாகராசா தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் மேதினக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சிங்கள தலைமைகள் தமிழர்களுக்கான எந்த அரசியல் தீர்வையும் பெற்றுக் கொடுக்காமல் காலம் கடத்திய வரலாறு தான் உள்ளது. சிறந்த ஆயுதப் போராட்ட இயக்கம் எங்களிடம் இருந்தாலும் அரசியல் தீர்வை பெற நல்லதொரு அரசியல் தலைமைகள் வேண்டும் என்றே தமிழ் தேசியக் கூட்டமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கினார்கள்.

அதனாலேயே தமிழ் மக்களும் கூட்டமைப்பை ஆதரித்து வந்தார்கள். ஆனால் இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தடம் புரண்டு வருகின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்துள்ளது. நாம் எமது அரசியல் நிர்வாகத்தினுள் ஜனாதிபதியாக இருந்தாலும் சரி, பிரதமரானாலும் சரி எமது தமிழ்த்தேசிய இனத்திற்காக தீர்வை பெற்றுத்தருவார் களா என்றால் அது நடக்காத ஒன்றாகவே உள்ளது. எனவே இந்த சந்தர்ப்பத்தில் அடுத்த பெரும்பான்மை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களிடம் வந்துள்ளது எனவே தமிழ் மக்களே தீர்மானியுங்கள் எனத் தெரிவித்தார். (2-5-250)




## நிரந்தர கிராம அலுவலர்கள் இன்மையால்

# தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பதில் கிராமஅலுவலர்களை தேடி அலைகிறோம்

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட வவுனியா நகரப் பகுதி பிரதேச செயலக பிரிவில் உள்ள 42, கிராம அலுவலர் பிரிவுகளிலும் மொத்தம் 01, இலட்சத்து 17, ஆயிரத்து 153, குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இங்குள்ள 16, கிராமங்களுக்கு நிரந்தர கிராம அலுவலர் இல்லாமையால் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பதில் கடமையாற்றும் கிராம அலுவலரைத் தேடி அலையும் அவல நிலை காணப்படுவதாக அப்பகுதி கிராமங்களின் மக்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா மாவட்டத்தில் அதிக மக்கள் தொகை கொண்ட பிரதேச செயலகமாக வவுனியா நகரப் பகுதி பிரதேச செயலக பிரிவு காணப்படுகின்றது.

இங்கு, தமிழ் குடும்பங்கள் ஒரு இலட்சத்து 08, ஆயிரத்து 835, குடும்பங்களும், சிங்கள குடும்பங்கள் 03, ஆயிரத்து 432, குடும்பங்களும், முஸ்லிம் குடும்பங்கள் 04, ஆயிரத்து 868, குடும்பங்களும், பறங்கிய இன மக்கள் உட்பட ஏனைய 26, குடும்பங்களுமாக மொத்தம் 01, இலட்சத்து 17, ஆயிரத்து 153 குடும்பங்கள் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இங்குள்ள 42, கிராம அலுவலர் பிரிவுகளில் 26, பிரிவுகளுக்கு மட்டுமே நிரந்தரமாக கிராம அலுவலர்கள் காணப்படுவதுடன், 16, பிரிவுகளில் நிரந்தர கிராம அலுவலர்கள் நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இந் நிலையில், தமது பகுதிக்கான பதில் கிராம அலுவலர்களிடம் மக்கள் வேலை வாய்ப்புகளுக்கான நற்சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்காகவும் மற்றும் தமது வங்கி நடவடிக்கைகள், வாழ்வாதார உதவித் திட்டங்கள், உட்பட பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் கிராமஅலுவலரின் சிபார்சுக் கடிதங்களுக்காக அவர்கள் கடமையாற்றும் நிரந்தர கிராம அலுவலர் பிரிவுகளிற்கு தேடி அலைந்து திரிவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே, இது தொடர்பில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வடக்கு மாகாண சபையின் கிராம அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் கவனத்தில் எடுத்து தமது பகுதிக்கான கிராம அலுவலர் வெற்றிடங்களுக்கு நிரந்தர கிராம அதிகாரிகளை நியமித்து தர வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (2-5-15)

# சர்வதேச தொழிலாளர் தினம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது

(மன்னார்)

சர்வதேச தொழிலாளர் தினமானது தற்போது அரசியல் மயப்படுத்தப்பட்டு அரசியல் கட்சிகள் ஆதாயம் தேடுவதற்காகவும், கூட்டத்தை கூட்டுவதற்காகவும் தொழிலாளர் தினம் நிகழ்வாக அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

"அடக்கு முறைக்கு எதிராக அணி திரள்வோம்" எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன் றியத்தின் ஏற்பாட்டில் மே தின கூட்டம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு மே தின சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்போதைய சூழ்நிலையில் மே தினங்கள் அரசியல் கட்சிகளின் கூட்டங்களாகவே நடத்தப்பட்டு வருகின்றன. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மிக மோசமான முறையில் குறித்த சம்பவம் அரங்கேறி வருகின்றது. மே தினம் என்கின்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இடதுசாரிகள் தமது பிரதான கொள்கைகளை கோட்பாடுகளோடு முன்னிறுத்திய காலங்கள் எல்லாம் போய் தற்போது இலங்கை போன்ற நாடுகளில் இடது சாரிகள் வலுவான ஒரு நிகழ்வை நடத்த முடியாத ஒரு சூழ் நிலையில் காணப்படுகின்றனர். தொழிற்சங்கங்கள் தொழில் உரிமைகளுக்காகவும், தொழில் உரிமைகளுக்கான நிலைப்பாட்டை சரியாக நகர்த்திச் செல்ல வேண்டிய போக்கிலும் கொண்டு செல்ல வேண்டிய தேவை தொழிலாளர் களுக்கும், தொழில் உறவாளர்களுக்கும் தொழில் உரிமையாளர்களுக்கும் இடைச் செல்லக்கூடிய ஒரு பணிக்காக நாங்கள் அவர்களுடைய உரிமைக்காக போராட வேண்டிய கால கட்டத்தில்இவ்வாறானநிகழ்வுகளை ஏற்படுத்த வேண்டிய தார்மீக பொறுப்பும்,கடமையும் சமூக நிலையியலாளர்களுக்கு உள்ளது என தெரிவித்தார். (2-5-4)



மாந்தை மேற்கு பிரதேச சபையின் பிரதான அலு வலகக் கட்டடம், திறந்தவெளி அரங்கு ஆகியவற்றின் திறப்பு விழா நேற்று செவ்வாய்க் கி ழமை முற்பகல் 11.30 மணி யளவில் திறந்து வைக்கப் பட்டது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள் :- பொ.சோபிகா)

## முள்ளிக்குளம் முதற்கட்ட வெற்றி

# எதிர்காலத்தில் காணிகள் விடுவிக்கும் செயற்பாடுகள் படிப்படியாக தொடரும்

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் முள்ளிக்குளம் பகுதி மீண்டும் அம்மக்களிடத்தில் கையளிப்பதற்கு கடற்படையினர் இணங்கியமை தமது முயற்சிகளுக்கு கிடைத்த முதல் வெற்றியென சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் காலத்தில் படிப்படியாக காணிகளை விடுவிக்கும் செயற்பாடுகள் தொடரும் எனக் குறிப்பிட்டவர் சொற்ப காலத்தில்காங்கேசன்துறைதொண்டைமானாறு வீதியும் மீளத்திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படுமெனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவுடன் விரைவில் அடுத்த கட்ட விடயங்கள் குறித்து பேசவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஒரு தசாப்த காலமாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த மன்னார் முள்ளிக்குளம் கிராமத்தின் பகுதியொன்றை விடுவிக்க கோரி அம்மக்கள் தொடர்ச்சியாக 38 நாட்களாக போராட்டத்தினை முன்னெடுத்திருந்த நிலையில் அப்பகுதி நேற்று முன்தினம் மீண்டும் மக்களிடத்தில் கையளிப்பதற்கு கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய பகுதிகளில் உள்ள காணிகள் விடுவிப்பு குறித்தும் கேப்பாப்பிலவில் தொடரும் மக்கள் போராட்டம் குறித்தும் அமைச்சர் சுவாமிநாதனிடத்தில் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு, கிழக்கில் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளை மீண்டும் அவர்களிடத்தில் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பணிப்புரைக்கு அமைய நடவடிக்கைகளை நான் முன்னெடுத்திருந்தேன்.

கடந்த 24ஆம் திகதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன உள்ளிட்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகள், முப்படையினர் உள்ளிட்டவர்களுடன் வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகளையும் அழைத்து விசேட கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தேன்.

இந்தக் கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்னர் முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையினர் வைத்திருக்கும் பொதுமக்கள் நிலங்கள் விடுவிக்கப்படவேண்டுமெனக் கோரியிருந்தனர்.

அதற்கு அமைவாக அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்து அப்பிரதேச அருட்தந்தைமார், மக்கள் பிரதிநிதிகள், கடற்படை அதிகாரிகள் ஆகியோரும் அவ்விடத்திற்குச் சென்று கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எடுப்பதாக இணங்கியிருந்தோம். அவ்விணக்கப்பாட்டிற்கு அமைவாகவே அங்கு சென்று கலந்துரையாடி பொதுமக்களுக்குச் சொந்தமான பகுதியை விடுவிப்பதென்ற முடிவுக்கு வந்தோம்.

காணிகளை விடுவிக்குமாறு மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் அதுதொடர்பாக நான் எடுத்த முயற்சிகளுக்கு அமைவாக முள்ளிக்குளம் விடயம் முதற்கட்டமாக வெற்றி கண்டிருக்கின்றது.

இதேபோன்று வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய பகுதிகளையும் விடுவிக்கும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறிப்பாக சொற்ப காலத்தில் காங்கேசன்துறை தொண்டைமானாறு வீதி திறக்கப்படவுள்ளதோடு மயிலிட்டி சந்தி உள்ளிட்ட 289ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பகுதி உள்ளிட சில இடங்களும் மக்களிடத்தில் கையளிக்கப்படவுள்ளன.


அத்துடன் ஏனைய பகுதிகள் விடுவிப்பு குறித்தும் இராணுவத்தினருடன் அவர்களுக்குரிய மாற்று இடங்களை வழங்குவது குறித்து மீண்டுமொரு தடவை நான் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவை விரைவில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளேன். இதன்போது விவசாயக் காணிகள் விடுவிப்பு குறித்தும் சிவில் பாதுகாப்பு ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குரிய மாற்றுவழிகள் குறித்தும் கவனம் செலுத்தவுள்ளேன் என்றார். (2-5)

# உறவுகளின் போராட்டம் தொடர்கிறது



வவுனியாவில் நேற்றைய தினம் 68 ஆவது நாளாகவும் காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவினர் களினால் சுழற்சி முறையி லான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடைபெறுகின்றது. படையினரிடம் கைய ளிக்கப்பட்ட தமது உறவினர் கள் தொடர்பில் பதிலளிக்க கோரியும், அரசியல் கைதி களை விடுதலை செய்யக் கோரியும் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குமாறு கோரியுமே இப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (2-5-250)

# தலைமன்னார் மேற்கில் மேதின நிகழ்வு



(மன்னார்)

தலைமன்னார் மேற்கில் மேதினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதன்போது புனித அந்தோனியார் முற்றம் ஒன்று மீனவர்களின் ஆதரவுடன் பங்குத் தந்தை நவரட்ணம் தலைமையில் பல இலட்சம் ரூபா செலவில் சொரூபம் அமைக்கப்பட்டது.

தொழிலாளர்கள் தினமான நேற்று முன்தினம் காலை 6 மணியளவில்தொழிலாளர்களின் தலைவராம் புனித சூசையப்பரின் திருச்சொரூபத்தை பக்தர்கள் புனித லோறன்சியார் தேவாலயத்திலிருந்து கவி பாடிய வண்ணம் சுமந்து சென்று கடற்கரையிலுள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் வைத்தனர்.

தொழிலாளர்கள் தின திருப்பலியைத் தொடர்ந்து இறுதி ஆசீர்வாதத்தின் பின்னர் புனிதரின் சொரூபம் பக்தர்களினால் ஆலயத்திலிருந்து கவி பாடப்பட்டு கடற்கரையை நோக்கி சுமந்து செல்லப்பட்டு தலைமன்னார் பாரம்பரிய வழக்கப்படி புனிதரின் திருச் சொரூபத்தை சுமந்து செல்லும் படகு குலுக்கல் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதில் புனிதரின் சொரூபம் ஏற்றப்பட்டு அப் படகு முன் செல்ல ஏனைய படகுகள் அப்படகைத் தொடர்ந்து சென்றன. கடலிலே பக்தர்கள் செபமாலையை செபித்தவர்களாக ஒவ்வொரு படகுகளிலும் சென்றனர்.

இறுதியில் காலை 9.30 மணியளவில் திருச் சொரூப ஆசீருடனும் படகுகள் ஆசீர்வதிக்கப்பட்டும் நிறைவுற்றது. (2-5)




# போக்குவரத்து சேவையை ஆரம்பித்து தருமாறு முதலமைச்சருக்கு மகஜர்

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள மல்லாவி ஐயங்கன் குளம், புத்துவெட்டு வான் ஊடாக கிளிநொச்சி வரையான பயணிகள் போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்துத் தருமாறு மேற்படி கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் கூட்டாக இணைந்து வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட துணுக்காய் பிரதேச செயலக பிரிவில், மிகவும் பின்தங்கிய கிராமங்களான ஐயங்கன் குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், தேறாங்கண்டல் ஆகிய கிராமங்களில் சுமார் 1200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் மு/பழைய முறிகண்டி அ. த. க. பாடசாலை, மு /புத்துவெட்டு வான் அ. த. க. பாடசாலை, மு/தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை ஆகிய இடை நிலைப் பாடசாலைகள் உட்பட க.பொ. த. உயர்தரப் பிரிவு வரையான வகுப்பைக் கொண்ட மு/ஐயங்கன் குளம் அ. த. க. பாடசாலை உள்ளடங்கலாக 4 பாடசாலைகளும் ஆரம்ப சுகாதார நிலையம், தபாலகம் உட்பட பல அரச அலுவலகங்களும் பொதுச் சந்தை உட்பட பல்வேறு பொதுச் சேவைப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

யுத்தம் முடிவடைந்து 7 வருடங்களை கடந்துவிட்ட நிலையில் இயல்பு வாழ்க்கை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறுவதாகக் கூறப்படுகிற போதும் பொதுப் போக்குவரத்துச் சேவை இல்லாத நிலையில் அவசர நோயாளர் தொடக்கம் பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்பவர்கள் வரையில் அடர்ந்த காட்டுப் பாதை ஊடாக அச்சத்துடன் கால்நடையாகவோ அல்லது மாட்டு வண்டிகளிலோ பயணிக்கும் அவல நிலை தொடர்கின்றது.

இக் கிராமங்களுக்கான பொதுப்போக்குவரத்துச்சேவை இல்லாத காரணத்தால் ஏ9, வீதியில் உள்ள கொக்காவில் சந்தியில் இருந்து கடமைக்கு வரும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகர்கள் 14 கிலோ மீற்றர் தூரத்திற்கு நடந்து செல்ல வேண்டும்.


இந் நிலையில் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தங்கள் தின வரவுப் பதிவுகளை வரவுப்பதிவு இயந்திரம் மூலம் ஒப்பமிட வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுற்று நிருபம் ஊடாக பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறை போக்குவரத்துச் சேவை இல்லாத எமது கிராமப்புற பாடசாலைகளில் சுயநலம் பாராது கடமை நேரம் முடிந்த பின்பும் மாணவர்களுக்கு சேவையாற்றும் ஆசிரியர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கி அதனால் எமது மாணவர்களின் கல்வி அடைவு மட்டங்களை பாதித்து விடுமோ என அச்சமடைகின்றோம்.

எனவே வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் முடிவடைவதற்குள் எங்கள் கிராமங்களிற்கு தாங்கள் ஒருமுறை விஜயம் செய்து எங்கள் கிராமங்களின் அவல நிலையை பார்க்க வேண்டும் எனவும் எமது பொதுத் தேவைகளை நிறைவேற்றித் தரவேண்டும் எனவும் அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)



கேலிச்சித்திரம்


மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியின் மே தினக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் பல்லாயிரக்கணக்கானோரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

# தமிழருக்கு எதிராக சிங்களவர்களை உசுப்பி விட்டு ஆட்சியைப் பிடிக்க மகிந்த தீவிர முயற்சி

## ஜே.வி.பியின் தலைவர் அநுர கடும் விசனம்

புலிகள் மீண்டும் எழுச்சி பெறப்போகின்றார்கள் என்று தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களை உசுப்பிவிட்டு இழந்த ஆட்சியைப் பிடிக்க மகிந்த ராஜபக்ஷ தீவிரமாக முயற்சிக்கிறார் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருந்த மேதினக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பு பீ.ஆர்.சி. மைதானத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய ஜே.வி.பி. தலைவர், கடந்த 69 வருடங்களாக மாறி. மாறி ஆட்சிசெய்த ஆட்சியாளர்கள் பொருளாதார ரீதியாகவும் சுற்றாடல் ரீதியாகவும் நாட்டை மோசமான நிலைக்கு இட்டுச் சென்றிருப்பதுடன் சர்வதேசத்திடம் பிச்சையெடுக்கும் நிலைக்கு நாட்டை முன்னடத்திச் சென்றிருப்பதாகவும் குற்றஞ்சாட்டினார். நாட்டு மக்களை கௌவரமானவர்களாக வாழவைப்பதற்குப் பதிலாக இழிவானவர்களாக வாழ்வதற்கான வழிகளையே இவர்கள் ஏற்படுத்தியிருப்பதாக கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ சிங்களவர்களுக்கு எதிராக தமிழர்களை உசுப்பிவிட்டு தேசப்பற்றை வெளிக்காட்ட முயற்சிக்கும் அதேநேரம், ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்குச் சொந்தமான அரிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதில் தீவிரம் காட்டியுள்ளார். மறுபக்கத்தில் மைத்திரிபால சிறிசேன பயத்தின் காரணமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தாது பின்னடித்து வருகின்றார். தேர்தலை நடுத்துவாராயின் அத்துடன் அவருடைய ஜனாதிபதி பதவி இல்லாமல் போகும் என்பது அவருக்கு உறுதியாகத் தெரிந்துள்ளதாகவும் ஜே.வி.பியின் தலைவர் சுட்டிக்காட்டினார்.




கல்வித்துறை மற்றும் சுகாதாரத்துறைக்கான ஒதுக்கீடுகள் மிகவும் குறைவாக காணப்படுகின்றன. ஜனாதிபதிக்கு இரண்டு கார்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் 5740 கோடி ஒதுக்கியுள்ளனர். அதேநேரம், பிரதமருக்கு இரண்டு கார்களை கொள்வனவு செய்ய 5930 கோடியை ஒதுக்கியுள்ளார்கள். மறுபக்கத்தில் மீதொட்டமுல்லயில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வெறும் ஒரு இலட்சம் ரூபாவே நட்டஈடு வழங்கப்படுகிறது. இவர்களின் ஒரு காருக்கு செலவாகும் பணத்தை சமப்படுத்த மீதொட்டமுல்லயில் 3000 பேர் உயிரிழக்கவேண்டும். ஜனாதிபதி தனது வீட்டிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பாராளுமன்றத்துக்கு ஹெலிகொப்டரில் செல்கின்றார். தற்பொழுது இருக்கும் ஆட்சி ஆட்சியாளர்களுக்கான ஆட்சியாகும். அவர்கள் பொதுமக்கள் பற்றி கவலைப்படுவதில்லை.

மகிந்த ராஜபக்ஷ புலிகள் மீண்டும் புத்துயிர் பெறப்போகின்றார்கள் எனக் கூறிதனது இழந்த அதிகாரத்தைப் பெற முடியுமென முயற்சிக்கின்றார். இதற்கு வடக்கிலும் சிலர் ஆதரவளிக்கும் வகையில் செயற்படுகின்றனர். எனினும், யுத்தத்தில் ஏற்பட்ட பிரதிபலன் காரணமாக வடக்கில் மீண்டுமொரு ஆயுதப் புரட்சி ஏற்படாது. அவ்வாறு ஒரு புரட்சி ஏற்படுவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் இடமளிக்காது. யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக மே தினத்தை நடத்தி இந்த செய்தியையே தாம் அங்கு கூறியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மீதொட்டமுல்லயில் மீண்டும் அனர்த்தம்

## மக்களை வெளியேறுமாறு அறிவிப்பு



(கொழும்பு)

மீதொட்டமுல்ல குப்பை மேடு பகுதியில் மீண்டும் அனர்த்தம் ஏற்படும் அபாயம் உள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால், அப் பகுதியிலுள்ள மக்களை அங்கிருந்து வெ்ளியேறுமாறும் கோரப்பட்டுள்ளது.

முன்னதாக, அவதானத்திற்குரிய பகுதிகள் எனப் பெயரிடப்பட்டுள்ள பிரதேசங்களில் இருப்பவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

எது எவ்வாறு இருப்பினும், எச்சரிக்கையை பொருட்படுத்தாது சுமார் 200க்கும் அதிகமான குடும்பங்கள் வெளியேறாமல் அப் பகுதியிலேயே தங்கியிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த நிலையில், குறித்த சூழலில் இருந்து அவர்களை வெளியேறுமாறு. நேற்று முன்தினம் இரவு அறிவிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

# ஜே.வி.பியினர் மீது சு.கவினர் தாக்குதல்

மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேதின பேரணி மற்றும் கூட்டம் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்காக கட்சியின் ஆதரவாளர்கள் அழைத்து வரப்பட்ட பேருந்து மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

தம்புக்கத இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மீது கற்கள் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மேதின பேரணியில் கலந்து கொண்டவர்களினால் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக பேருந்து கடும் சேதமடைந்துள்ளதாக, சாரதியினால் வரக்காபொல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி கெடம்பேயில் இடம்பெற்ற ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி மேதின பேரணியில் பங்கேற்றதன் பின்னர், கொழும்பு நோக்கி தனியார் பேருந்தில் பயணித்தவர்களினால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர் பில் வரக்காபெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கூட்டு எதிரணி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா?

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நழுவல்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கட்சி கொள்கையை மீறி காலிமுகத்திடலில் பொது எதிரணியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது.

கட்சியாக இணைந்து செயற்படவே முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடுவதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க இடமளிக்க மாட்டோம் எனவும் கட்சி தெரிவித்தது.

சர்வதேச மேதினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் கண்டி கெட்டம்பே மைதானத்தில் இடம்பெற்ற அதேநிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து தனித்து செயற்படும் பொது எதிரணி கொழும்பில் காலி முகத்திடலில் மேதினக் கூட்டத்தை நடத்தியது.

இந்நிலையில் கட்சியில் இருந்து தனித்து செயற்பட்ட பொது எதிரணி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா? என வினவியபோதே அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வீட்டுக்குள் கஞ்சா குடும்பப் பெண் கைது

(கொழும்பு)

விற்பனைக்காக வீட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளை மீட்டுள்ளதோடு, அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரை நேற்று முன்தினம் மாலை ஊவாபரணகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஊவாபரணகம கட்டுகல்ல பகுதியில் வீட்டில் கஞ்சா வைத்திருப்பதாக கிடைத்த இரகசியத் தகவலின்படி சந்தேகநபரான 39 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தாயின் வீட்டில் அதிரடியாக சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா போதைப் பொருளை மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான குறித்த தாயை வெலிமடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவிருப்பதாகவும், கஞ்சா போதைப் பொருளும் நீதிமன்றில் கையளிக்கப்படவுள்ளதாகவும் ஊவாபரணகம பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# கூட்டு எதிரணி பொலிஸாருக்கு விசேடமாக நன்றி தெரிவிப்பு



இம்முறை மேதினத்திற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நன்றி தெரிவித்துள்ளது.

குறிப்பாக, எந்தவொரு தயக்கமும் இன்றி தமக்கு ஒத்துழைப்பு நல்கிய பொலிஸாருக்கு விசேட நன்றிகள் என பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

பொலிஸாரால் எதிர்பார்க்கப்படாத அளவுக்கு மக்கள் வந்திருந்தமையால் மாற்று வீதிகள் பலவற்றை திறந்து பயன்பாட்டுக்கு வழங்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டதாகவும் இதன்போது தினேஷ் குணவர்த்தன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# கண்டி குப்பை மேட்டில் எரிவாயு அச்சுறுத்தல்

(கொழும்பு)

கண்டி நகரில் உள்ள கொஹாகெடா குப்பை மேட்டில் எரிவாயு அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ட்ரோன் கமரா பயன்படுத்தி பேராதனை பல்கலைக்கழகத்தின் நிபுணர்களின் உதவியுடன், நேற்று பரிசோதிக்கப்பட்டதாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை தெரிவித்துள்ளது.

எரிவாயு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையை அடுத்து உடனடியாக ட்ரோன் கமரா பயன்படுத்தி இந்தக் குப்பை மேட்டினை ஆய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் பைசர் முஸ்தப்பாவினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் கிடைக்கும் தகவல் தொடர்பில் எதிர்வரும் 5ஆம் திகதி மத்திய மாகாண பிரதான அமைச்சருடன் விசேட கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## வெட்டிவேர்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name: Vetiveria zizanoided
S. Name: Sevendera
E.Name: khus - Khus grass
Sans: Abhaya

வெட்டி வேரானது பல்லாண்டுத் தாவரமாகும். இதன் வேரிலிருந்து சிறு சிறு நீட்டங்கள் போன்று தூக்கங்கள் காணப்படும். இதன் வேரானது மென்மையான பஞ்சமைப்பு போன்று காணப்படும்.

இதன் வேர், வேரிலிருந்து வரும் நீட்டங்கள் மண்ணிறமாகக் காணப்படும்.

இதன் தண்டு 60-90 செ.மீ. நீளமுடையது தண்டு நேராக, வடிவாக நீண்டு காணப்படும். இதன் தண்டானது அழுத்தமாகவும் மினுமினுப்பாகவும் காணப்படும். இதன் இலையின் நீளம் 30- 60 cm ஆகும். இதன் இலை 0.8-1.8 cm அகலமுடையது. இலைகளின் இரண்டு முனையும் படிப்படியாக ஒடுங்கி வந்து கூராக முடியும். இலைகள் தட்டையானது, மெல்லியதாகக் காணப்படும். இலைகள் அழுத்தமாகக் காணப்படும்.

பூக்கள் இருபாலானவை. பூக்களின் அல்லியில் நிறைய நரம்பமைப்புக்கள் காணப்படும். இதன் சூலகம் மேற்புறமாக காணப்படும். சூலகத் தண்டானது நீளத்தில் குறைந்தவையாக காணப்படும். இதில் 3 மகரந்த மணிகள் காணப்படும்.



இதன் வேரானது கசப்பு சுவையுடையது. இந்த வேரானது உடலிலுள்ள வாயுக்களை வெளியேற்றி சமிபாடின்மையை நீங்கி பசியை தூண்டக் கூடியது. வெட்டிவேர், இலாமிச்சை வேர் , நிலவேம்பு , சந்தனம், பற்படாகம், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு இவற்றை சம அளவு எடுத்து 8 மடங்கு நீர் விட்டு 1/8 ஆக வற்றக் காய்ச்சி எடுத்த குடிநீரை காலை மாலை அருந்தி வர காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், சிறுநீர்கத் தொற்றுடன் வந்த காய்ச்சல் எல்லாம் நீங்கும்.

வெட்டிவேரானது வாசனையை கொண்டுள்ளதால் இதைப் பயன்படுத்திச் செய்யப்படும் எண்ணெயானது அழகு சாதனப் பொருட்கள், நறுமணமூட்டிகள், கிறீம்களில் சேர்க்கப்படுகின்றன.

சாதாரண உஷ்ண காலத்தில் நமது உடலின் தட்பவெப்ப நிலைக்கு வெட்டிவேர்த் தைலத்தை தலைக்கு வைத்து உடம்புக்கும் பூசி குளிக்க கூந்தலும் கருமையாகி உடலில் ஏற்படும் உஷ்ணத்தையும் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

### வெட்டிவேர்த் தைலம் செய்யும் முறை

வெட்டிவேர் -350 கிராம், 4 மடங்கு நீர் விட்டு 1/4 ஆக வற்றக் காய்ச்சி குடிநீரை எடுத்து 650 மில்லி லீற்றர் நல்லெண்ணெயுடன் கலந்து அதில் அதிமதுரத்தை தூளாக்கி அதனுள் போட்டு மெழுகுப் பதமாகக் காய்ச்சி வடித்து எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

அத்துடன் பூமியில் வெப்பம் கூடிய காலத்தில் உடல் உஷ்ணம் கூடும் நிலைகளில் வெட்டி வேரால் தயாரிக்கப்பட்ட விசிறிகளைப் பயன்படுத்தி விசுக்க உடலின் உஷ்ணம் குறைந்து உடல் வெப்ப நிலை குறையும்.

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் நரம்புதாபிதம், தாபிதம், கால் எரிவு என்பனவற்றிற்கு பாதணிகளில் (Leather) (லெதர்) இற்கு பதிலாக வெட்டிவேரை பயன்படுத்தி பாதணி செய்து பயன்படுத்தினால், தாபிதம், அழற்சி, கால் எரிவு என்பன குறையும்.

### குளியல் பொடி

வெட்டிவேர்
பச்சைப்பயறு
எலுமிச்சம்பழத்தோல்
கஸ்தூரி மஞ்சள்

இவற்றை சம அளவு எடுத்து எல்லாவற்றையும் தனித்தனியே அரைத்து பின்பு நுண்துணியால் அரித்து பின்னர் எல்லாவற்றையும் கலந்து காற்றுப் புகாதவண்ணம் புட்டியில் அடைத்து அதனை நீர் அல்லது பன்னீருடன் கலந்து அக்குளில் வியர்வை நாற்றம் நீங்கி உடலுக்கு நறுமணத்தையும் கொடுப்பதுடன் இதனை உடல் முழுதும் குளிக்க உடல் பளபளப்பையும் பெறும்.

அத்துடன் பெண்கள் தமது தலைமுடிக்கு அலங்காரம் செய்வது போல் செய்து பாவிக்க இது கூந்தலுக்கு நறுமணத்தை கொடுப்பதுடன் பொடுகுத் தொல்லை நீங்கும். ஒற்றைத் தலை வலி உள்ளோர்களுக்கு வெட்டிவேரால் தலையணை போல் செய்து அதனை தலைக்கு தலையணையாக வைத்து படுக்க ஒற்றைத்தலைவலி நீங்கும்.

# தமிழ்நாடு முழுவதும் ஓ.பி.எஸ். சுற்றுப்பயணம்

## அ.தி.மு.க. தொண்டர்களை சந்திக்கிறார்



(சென்னை)

அ.தி.மு.க. இரு அணிகள் இணைப்புக்கான சாத்தியம் தற்போது இல்லாத சூழ்நிலையில் ஓ.பன்னீர் செல்வம் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

அ.தி.மு.க. இரு அணிகள் இணைப்பு முயற்சிக்கான பேச்சுவார்த்தை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

ஓ.பன்னீர் செல்வம் அணியினர் தாங்கள் விதித்த 2 நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் பேச்சுவார்த்தை என்று உறுதியாக கூறிவிட்டனர்.

இரு அணியினரும் மாறுபட்ட கருத்துக்களை கூறி வருவதால் பேச்சுவார்த்தைக்கு இணக்கமான சூழல் உருவாகவில்லை.

முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி சேலத்தில் பேசும் போது, 90 சதவீத நிர்வாகிகள் தம்மிடம் இருப்பதாகவும், அதனால் எந்த கொம்பனாலும் கட்சியையும், ஆட்சியையும் அசைக்க முடியாது. பேச்சுவார்த்தைக்கு வராவிட்டாலும் பரவாயில்லை என்றார்.

ஓ.பன்னீர்செல்வம்அணியை சேர்ந்த முன்னாள் அமைச்சர் செம்மலை தலைமையில் சேலம் மாவட்டத்தில் நடந்த கூட்டத்தில் இரு அணிகள் இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதையடுத்து இணைப்புக்கான பேச்சுவார்த்தை நடை பெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதனால்ஓ.பி.எஸ். அணியினர் அடுத்தகட்ட நடவடிக்கையை தொடங்கி விட்டனர். இணைப்புக்கான சாத்தியம் தற்போது இல்லாத சூழ்நிலையில் ஓ.பன்னீர் செல்வம் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

32 மாவட்டங்களுக்கும் சென்று அ.தி.மு.க. தொண்டர்களை சந்திக்கிறார். எதிர் வரும் 5 ஆம் திகதி சுற்றுப் பயணத்தை தொடங்குகிறார். இந்த மாதம் முழுவதும் பயணம் செய்கிறார். (இ-3)


# மல்லையாவை கொண்டுவர சி.பி.ஐ.குழு லண்டன் பயணம்

(லண்டன்)

லண்டனில் கைது செய்யப்பட்ட தொழிலதிபர் விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு கொண்டு வருவதற்காக சி.பி.ஐ. குழு லண்டன் சென்று ஆலோசனை நடத்தி வருகிறது.

தொழில் அதிபர் விஜய் மல்லையா, பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி வரை கடன் வாங்கிவிட்டு அதை திரும்பச் செலுத்தவில்லை.

இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றில் நடைபெற்று வரும் நிலையில், தலைமறைவான விஜய் மல்லையா, தனது சிறப்பு கடவுச்சீட்டை பயன் படுத்தி திடீரென லண்டன் தப்பிச் சென்று விட்டார்.



விசாரணைக்கு ஆஜராகும்படி சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கப் பிரிவு பல முறை சம்மன் அனுப்பியும் ஆஜராகவில்லை.

எனவே, அவருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் பிடி யாணை பிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயார்

## பன்னீருக்கு பழனிச்சாமி பதில்



(சென்னை)

நிபந்தனை இல்லாத பேச்சுவார்த்தைக்கு நாங்கள் எப்போதும் தயார் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

மே தினத்தையொட்டி, அ.தி.மு.க. (அம்மா) தென் சென்னை தெற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்கம் சார்பில், சென்னை சாலிகிராமம் தசரதபுரம் பேருந்து நிலையம் அருகில் நேற்று முன்தினம் மாலை பொதுக் கூட்டம் நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டு உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசு செயற்படாத அரசு, நிர்வாகம் முடங்கிக் கிடக்கிறது என்று எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் சில அரசியல் கட்சித் தலைவர்கள் பேசி வருகிறார்கள். எனது தலைமையில் ஆட்சிப் பொறுப்பு ஏற்று 75 நாட்களில் 1,560 கோப்புகளில் கையெழுத்திட்டு, அதற்குரிய ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. திட்டங்கள் வேகமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதைக்கண்டு பொறுக்காத எதிர்க்கட்சியினர் தான், அரசு வேகமாக செயற்படவில்லை என்று பேசிவருகிறார்கள்.

ஓ.பன்னீர் செல்வம் மதுரை விமான நிலையத்தில், 'நிபந்தனை இல்லாமல் இணைப்புக்கான பேச்சுவார்த்தைக்கு தயார்' என்று கூறியது பத்திரிகைகளில் வெளிவந்தது. அவருடைய அந்தப் பேச்சுக்கு பிறகுதான், பாராளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை, 'இதை நாங்கள் வரவேற்கிறோம்' என்றார்.

கட்சியின் மூத்த நிர்வாகிகளும், அமைச்சர்களும், 'நிபந்தனை இல்லாமல் பேச்சுவார்த்தைக்கு தயார்' என்று அறிவித்தார்கள். இரு தரப்பிலும் பேச்சுவார்த்தைக்காக குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால், திடீரென அவர்கள் அணி நிர்வாகிகள், சில நிபந்தனைகளை நிறைவேற்றினால் தான் பேச்சுவார்த்தைக்கு வருவோம் என்கிறார்கள்.

ஒரு பேச்சுவார்த்தையின் போது, முன்கூட்டியே நிபந்தனைகளை போட்டுவிட்டு, அதன் பிறகு தொடங்க முடியாது. நிபந்தனையில்லாமல் பேச்சுவார்த்தை என்று கூறிவிட்டு, இப்போது நிபந்தனை விதித்து பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போடுவது அவர்கள் தான். இரு அணிகளும் ஒன்றாக இணைய வேண்டும் என்பது எல்லோருடைய ஆசையும் ஆகும். ஆனால், அவர்கள் தினமும் ஒருவராக பேட்டி கொடுத்துக்கொண்டு வருவதுதான் முட்டுக்கட்டையாக இருக்கிறது.

பேச்சுவார்த்தையின்போது தான் எல்லாவற்றிலும் சுமுகமான முடிவை எடுக்க முடியுமே தவிர, நிபந்தனை போட்டுக் கொண்டிருந்தால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. ஆகவே, நிபந்தனை எதுவும் இல்லாமல் பேச்சுவார்த்தை மூலம் எல்லா பிரச்சினையையும் காண்பதற்கு நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அரச பயங்கரவாதத்தை இந்தியா ஊக்குவிக்கிறது

## பாக்.இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

காஷ்மீரில் இந்தியா அரச பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக பாகிஸ்தான் இராணுவத் தலைமைத் தளபதி ஜாவேத் பஜ்வா குற்றஞ் சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் இராணுவ தலைமைத் தளபதி ஜாவேத் பஜ்வா நேற்று முன்தினம் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதிக்கு வருகை தந்து, ஹாஜி பீர் செக்டாரில் உள்ள பகுதிகளை பார்வை யிட்டார். அப்போது அங்கு முகாமிட்டுள்ள அந்நாட்டு இராணுவ வீரர்களிடம் அவர் உரையாற்றினார்.

இந்திய இராணுவம் போர் நிறுத்தத்தை மீறி தாக்குதல் நடத்தி வருவதாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் ஜாவேத் பஜ்வாவிடம் கூறினர். மேலும், ஆக்கிரமிக்கும் முயற்சி ஏதாவது நடைபெற்றால் அதற்கு தங்கள் இராணுவத்தின் தயார் நிலை குறித்தும் பாஜ்வா விடம் அவர்கள் எடுத்துக் கூறினர்.

அப்போது சக இராணுவ அதிகாரிகளிடம் ஜாவேத்பஜ்வா



"சுய நிர்ணய உரிமை மற்றும் அடிப்படை மனித உரிமைகள் ஆகியவற்றுக்கான காஷ்மீர மக்களின் அரசியல் போராட்டத்துக்கு நாம் எப்போதும் ஆதரவு தருவோம். காஷ்மீரில் அரசு ஆதரவிலான பயங்கரவாதத்தை இந்தியா ஊக்குவிக்கிறது. காஷ்மீர் மக்களுக்கு எதிராக மட்டுமன்றி, பாகிஸ்தான் தரப்பு எல்லைப்பகுதியில் உள்ள மக்களுக்கு எதிராகவும் இந்தியா அட்டூழியம் புரிகிறது" எனக் கூறினார்.

காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாக பாகிஸ்தான் கூறி வரும் குற்றச்சாட்டுகளை இந்தியா தொடர்ந்து மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# கூட்டுப் படையில் குழப்பம் சிரியாவில் துருக்கிக்கு எதிராக அமெரிக்க படைகள் குவிப்பு



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராகப் போரிடும் அமெரிக்க கூட்டுப் படைகளில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அங்கு துருக்கிக்கு எதிராக அமெரிக்க படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

நேட்டோ எனப்படும் அமெரிக்க கூட்டுப்படையில் துருக்கியும் அங்கம் வகிக்கிறது. சிரியாவில் ஜனாதிபதி ஆசாத் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்காவும் துருக்கியும் இணைந்து வான்வழி தாக்குதல் நடத்தி வருகின்றன.

சிரியாவில் குறிப்பிடத்தகுந்த அளவில் குர்து இன மக்களும் வசிக்கின்றனர். அவர்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது. ஆனால் துருக்கி இராணுவத்தை பொறுத்தவரை குர்து இன மக்கள் அனைவரும் தீவிரவாதிகள்.

அந்த வகையில் சிரியாவின் கராசக் மலைப் பகுதி, வடக்கு ஈராக்கின் சின்ஜார் மலைப் பகுதியில் துருக்கி போர் விமானங்கள் குண்டுகளை வீசியுள்ளன. இதில் குர்து ஜனநாயக படையைச் சேர்ந்த 25 வீரர்கள் பலியாகினர்.

இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. குர்து இன மக்களின் பாதுகாப்புக்காக அமெரிக்காவின் அதிநவீன தாங்கிகள் கராசக், சின்ஜார் மலைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அங்கு அமெரிக்க படைகள் துருக்கி இராணுவத்தை கண்காணிக்கும் வகையில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றன.


நேட்டோ படையில் அமெரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல் கூட்டுப் படையில் பெரும் குழப்பத்துக்கு வித்திட்டுள்ளது. (இ-3)

# ஐ.நா.கூட்டத்தில் பங்கேற்க மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு



ஜெனீவாவில் ஜூன் மாதம் 12ஆம் திகதி தொடங்கும் ஐ.நா. மனித உரிமை ஆணைய கூட்டத்தில் பங்கேற்க மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகதி.மு.க. தலைமைக்கழகம் தெரிவித்துள்ளது. (இ-3)

# மூளையின்றி பிறந்த குழந்தையின் உடல் உறுப்புகள் பெற்றோரால் தானம்



அமெரிக்காவில் மூளையின்றி பிறந்த குழந்தையின் உடல் உறுப்புகள் பெற்றோரினால் தானமாக கொடுக்கப்பட்ட சம்பவம் அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்காவின் ஒக்லகோமா பகுதியைச் சேர்ந்தவர்கள் ராய்ஸ்- கெரியாங். கர்ப்பமாக இருந்த கெரியாங் கருவில் உள்ள குழந்தைக்கு ஈவா என பெயர் சூட்டியிருந்தார்.

ஆனால் கடந்த பெப்ரவரி மாதம் தான் கருவில் வளரும் குழந்தைக்கு மூளை உருவாகாமல் இருப்பது தெரியவந்தது.


இருப்பினும் ராய்ஸ்- கெரியாங் தம்பதியினர் குழந்தையை அழிக்க விரும்பாததால், சிசு வளர்ச்சி அடைந்து முழுக் குழந்தையாக பிறந்தது.

மூளை இல்லாததால் சிசுவின் உடல் உறுப்புகள் தானமாக கொடுக்கப்பட்டது.

இதுகுறித்து குழந்தையின் தந்தை தனது பேஸ்புக் தளத்தில் "ஹலோ, குட்பை அவர் சுவீட் ஈவா' என பதிவிட்டிருந்தார். இதனை பார்த்த பல்லாயிரக்கணக்கானோர் பெற்றோருக்கு ஆறுதலும் பாராட்டும் தெரிவித்திருந்தனர். (இ-3)




# பிரான்ஸில் பொலிஸார் மீது தாக்குதல்





(பாரிஸ்)

பிரான்ஸில் போராட்டக்காரர்களின் பெற்றோல் குண்டுக்கு பொலிஸ் காவலர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் குறித்த சம்பவம் நடந்துள்ளது. இதில் காவலர் ஒருவர் உடல் முழுவதும் நெருப்பால் சூழப்பட்டு உயிருக்கு போராடிய காட்சி அங்கிருந்தவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

குறித்த சம்பவத்தில் 6 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நடத்தப்படும் கருத்துக்கணிப்பில் தீவிர வலதுசாரி அரசியல் வாதியான Marine Le Pen முன்னிலை பெற்றுள்ளதை கண்டித்து போராட்டக்காரர்கள் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பேரணி ஒரு கட்டத்தில் கலவரமாக மாறி பெற்றோல் குண்டு வீச்சு வரை சென்றது.

இதில் கலவரத்தடுப்பு பொலிஸார் ஒருவரின் தலை மீது விழுந்த பெற்றோல் குண்டு அவரை நிலைகுலையச் செய்ததுடன். உடல் முழுவதும் நெருப்பு பற்றிக் கொள்ளும் அளவுக்கு சென்றதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. நூற்றுக்கணக்கான ஆயுதம் ஏந்திய கலவரக்காரர்கள் பொலிஸ் வாகனங்களுக்கு எதிராக தாக்குதலை தொடுத்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் தொடர்புடைய நபர்களில் 5 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

' இனவாதம் மற்றும் வெறுப்பு பிரசாரங்களுக்கு பெயர்போன Marine Le Pen பிரான்ஸ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள போராட்டக்காரர்கள்,

ஆயிரக்கணக்கானோர் மீண்டும் பிரான்ஸ் வீதிகளில் இறங்கி போராடவும் நீதிக்காகவும் ஒழுக்கத்திற்காகவும் குரல் கொடுக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-3)

# வடகொரியாவை முற்றுகையிட்டுள்ள அமெரிக்கக் கப்பல்களை பாதுகாக்க ஜப்பான் போர்க்கப்பல் விரைந்தது



(டோக்கியோ)

கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு முற்றுகையிட்டுள்ள அமெரிக்க கப்பல்களை பாதுகாக்கும் பணிக்காக ஜப்பானிய போர்க்கப்பல் புறப்பட்டுள்ளது.

உலக நாடுகளை அச்சுறுத்தும் விதத்தில் தொடர்ந்து அணு ஆயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது வடகொரியா. இதன் காரணமாக, வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் அமெரிக்காவும் கடந்த 2006 ஆம் ஆண்டில் இருந்து மிகக் கடுமையான பொருளாதார தடைகளை விதித்தன.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வரும் நிலையிலும், வடகொரியா தனது நிலையில் இருந்து பின்வாங்காமல் தற்காப்பு என்ற பெயரில் தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து தங்கள் நாட்டின்மீது போர் தொடுக்க ஆயத்தமாகி வருவதாக குற்றம்சாட்டி வரும் வடகொரியா, அமெரிக்காவை அழித்து விடுவோம் என்றும் மிரட்டியது.

இதனையடுத்து, வடகொரியாவை அச்சுறுத்தும் விதமாக அமெரிக்க போர்க் கப்பல்கள் மற்றும் நீர் மூழ்கிக்கப்பல்கள் கொரிய தீபகற்ப கடல்பகுதியை முற்றுகையிட்டுள்ளன. இந்நிலையில், ஜப்பான் தன்னுடைய மிக பெரிய போர்க்கப்பலை அமெரிக்க போர்க்கப்புல்களுக்கு பாதுகாப்பு அளிக்க அனுப்பியுள்ளது.

ஜப்பானின் கடற்பரப்பிற்குள் இருக்கும் அமெரிக்க விநியோகக் கப்பலுக்கு ஹெலிகொப்டர் தாங்கியான "ஈஸ்மோ" போர்க்கப்பல் பாதுகாப்பு வழங்குகிறது.

மேலும், அமெரிக்கா "கார்ல் வின்சன்" விமானந்தாங்கிக் கப்பல் உட்பட அமெரிக்க கடற்படைக் கப்பல்களுக்கு பாதுகாப்பு பணி மற்றும் எரிபொருள் நிரப்புவதற்காக, டோக்கியோவின் தெற்கிலுள்ள யோகோசுகாவிலுள்ள தளத்திலிருந்து புறப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த பிராந்தியத்தில் அதிகரித்து வருகின்ற பதற்றங்களுக்கு மத்தியில் "கார்ல் வின்சனை"யும், அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றையும் மூழ்கடித்து விடுவதாக வடகொரியா மிரட்டியுள்ளது.

ஜப்பான் தற்போது பாதுகாப்பிற்கு அனுப்பியுள்ள "இஸ்மோ" போர்க்கப்பல் ஜப்பான் கடற்படையின் பெருமையாக பார்க்கப்படுவதோடு, அந்நாட்டில் இருக்கும் மிகப் பெரிய போர்க் கப்பலாக இருக்கிறது. 249 மீற்றர் நீளம் கொண்ட "இஸ்மோ" போர்க்கப்பல் 9 ஹெலிகொப்டர்களை சுமந்து செல்லும் சக்தியுடையது என்றும், அமெரிக்காவின் நீரிலும், நிலத்திலும் தாக்குதல் நடத்தும் விமானந் தாங்கிகளை போன்றது என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (இ-3)

# மூன்று கால்களுடன் பிறந்த சிறுமிக்கு வெற்றிகரமாக நடந்த அறுவைச் சிகிச்சை





பங்களாதேஷில் மூன்று கால்களுடன் பிறந்த சிறுமிக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

பங்களாதேஷைச்சேர்ந்த சோய்டி கதூன் என்ற சிறுமி இடுப்புடன் இணைந்த மூன்றாவது காலுடன் பிறந்துள்ளார்.

தற்போது 3 வயதை எட்டியுள்ள இச்சிறுமிக்கு அவுஸ்திரேலியாவின் மோனாஷ் சிறுவர்கள் வைத்தியசாலையில் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து அறுவை சிகிச்சை நிபுணர் கிரிம்ஸ் கிம்பெர் கூறியதாவது, சோய்டியின் மூன்றாவது காலின் ஒரு பகுதியை பங்களாதேஷ வைத்தியர்கள் அகற்றினாலும், இரண்டு சாதாரண கால்களுக்கு இடையில் அவரது இடுப்புப்பகுதியில் ஒரு பெரிய பகுதி இருந்தது.

ஏனெனில் அங்கு இரட்டைப் பகுதி உள்ளது. சோய்டிக்கு இரண்டு மலக்குடல், இரண்டு பெண் குறிகள் இருந்ததுடன், இரண்டு மலவாசல்களுக்கான சாத்தியங்களும் இருந்தன. இந்த இரட்டைப் பகுதிகள், வழக்கத்திற்கு மாறான இடத்தில் வளர்ந்து கொண்டிருந்தன.

சிறுமியின் உடலில் இருந்த மூன்றாம் காலின் எஞ்சிய பகுதியை அகற்றிய வைத்தியக் குழுவினர், சோய்டி வீட்டிற்கு திரும்பியதும், இயல்பாக இயங்குவதை உறுதி செய்யும் வகையில் மறுகட்டமைப்பு சிகிச்சைகளையும் மேற்கொண்டார்கள்.

பகுதியளவு பார்வை குறைபாடுள்ள சோய்டி கதூனால், தற்போது நடக்கவும், ஓடவும் முடிகிறது என்றும் அவரின் எடையும் கூடியிருப்பதாக தெரிவித்துள்ளார். (இ-3)

# அமெரிக்காவில் பலத்த சூறாவளிக்கு 14 பேர் பலி

அமெரிக்காவில் பலத்த சூறாவளிக்கு 14 பேர் பலியாகி உள்ளனர். சூறாவளி காற்றின் போது மின் கம்பங்களும் சாய்ந்ததால் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வீடுகளில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

அமெரிக்க மாகாணங்களான டெக்சாஸ், ஆர்கன்சாஸ், மிசிசிப்பி, மிசவுரி, ஆக்லஹோமா ஆகியவற்றில் கடுமையான சூறாவளி காற்று வீசியது. அப்போது பலத்த மழையும் கொட்டியது. மணிக்கு 110 முதல் 130 கிலோ மீற்றருக்கும் மேலான வேகத்தில் காற்று சுழன்று வீசியதால் நூற்றுக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன.

ஆயிரக்கணக்கான மரங்களின் கிளைகள் முறிந்து வீடுகள் மற்றும் கார்களின் மீது விழுந்தன.




பல இடங்களில் கன மழையால் வெள்ளமும் கரைபுரண்டு ஓடியது. 3 முறை பலத்த சூறாவளி காற்று வீசியதை அமெரிக்க வானிலை ஆய்வு மையம் உறுதி செய்தது. ஆர்கன் சாஸ், மிசவுரி, மிசிசிப்பி மாகாணங்களில் வீடுகள் மீது மரங்கள் விழுந்ததில் 3 பேர் இறந்தனர்.

ஒரு குழந்தை உட்பட 3 பேர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு பலியாகினர். 72 வயது பெண் ஒருவர் காருடன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார். இந்த சூறாவளிக்கு இதுவரை 14 பேர் பலியாகியுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். சூறாவளி காற்றின்போது மின் கம்பங்களும் சாய்ந்ததால் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வீடுகளில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. (இ-3)

# போர்க்குற்ற நீதிமன்றில் இலங்கை படையினரை நிறுத்த அனுமதியேன்

## காலியில் மகிந்த சூளுரை



**(கொழும்பு)**

**இலங்கைப் படையினரை அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.**

கொழும்பு- காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் நடந்த கூட்டு எதிரணியின் மேதினப் பேரணியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் நாட்டின் வளங்களை விற்பனை செய்கின்றது. தெற்கில் மட்டுமல்ல. வடக்கு, கிழக்கில் உள்ள வளங்களையும் இந்த அரசு விற்பனை செய்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்துடன் சேர்த்து 15000 ஏக்கர் நிலத்தை சீனாவுக்கு வழங்கவும் மாதுரு ஓயா பகுதியில் இடம் வழங்கவும் அனைத்து ஏற்பாடுகளையும் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டு மக்கள் ஒருமுறை ஏமாந்து விட்டனர். மீண்டும் ஏமாறமாட்டார்கள். நாட்டின் வளங்களை பாதுகாக்க ஒன்றிணைந்து தேசிய கொள்கை அடிப்படையில் செயற்படுவர்.

இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையை நாம் காலி முகத்திடலில் இருந்து ஆரம்பிக்கின்றோம்.

எமது பயணத்துக்கு அச்சுறுத்தல்கள் பல ஏற்படுத்தப்பட்டன. எம்மை சிறையடைத்தார்கள். விமல் வீரவன்ச, ஜோன்ஸ்டன். கம்பன்பில, மகிந்தானந்த, நாமல், எனது சகோதரர்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் இவ்வாறு அச்சுறுத்தப்பட்டனர். அத்தனை அச்சுறுத்தல்களையும் தாண்டி இங்கு ஒன்று சேர்ந்துள்ளோம்.

இந்த அரசாங்கம் முடியுமானால் காலி முகத்திடலை மக்களை கொண்டு நிரப்பி மே நாள் கூட்டத்தை நடத்துமாறு எனக்கு சவால் விட்டது. நான் அந்த சவாலை ஏற்றுக் கொண்டேன்.

அந்தச் சவாலை வெற்றி கொண்டு காண்பித்துள்ளேன்.

இப்போது நான் இந்த அரசாங்கத்துக்கு ஒரு சவாலை விடுக்கின்றேன்.

எனது ஆட்சியை கைப்பற்ற இந்த அரசாங்கம் பல மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவு செய்துள்ளது. சிலர் மலசலகூடங்களுக்குள் வைத்தே பணத்தை வழங்கியுள்ளனர். எனது காலத்தில் படையினர் பயங்கரவாதத்தை இல்லாது செய்து சமாதானத்தை ஏற்படுத்தினர். எனினும் இன்று இராணுவத்தினரை மக்களின் நியாயமான கோரிக்கைகளை முடக்க பயன்படுத்தப் பார்க்கின்றனர்.

எமது இராணுவத்தினரை அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றில் நிறுத்தும் விதமாகவே இந்த அரசாங்கம் செயற்படுகிறது.

அதற்கு இடமளிக்க முடியாது. இந் நாட்டை பாதுகாத்த இராணுவத்தினரை அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றில் நிறுத்த ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நான் ஒருபோதும் நாட்டை காட்டிக் கொடுக்கமாட்டேன்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி



(கொழும்பு)


நான் ஒருபோதும் நாட்டைக் காட்டிக் கொடுக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



கண்டி - கெடம்பே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேநாள் பேரணியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் பதவிக்கு வந்த பின்னர் பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. வெளிநாட்டு சக்திகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகவும் நாட்டைப் பிளவுபடுத்த முனைவதாகவும் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

பௌத்தத்துக்கு சிறப்பிடம் வழங்கும் திட்டத்தில் இருந்து என்னை அகற்றுவதற்காக எதிர்ப்பாளர்கள் இவ்வாறான பொய்யான தகவல்களைப் பரப்புகின்றனர். நாட்டின் அரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் எல்லா மக்களும் அமைதியாக வாழுகின்ற சூழலை ஏற்படுத்தியுள்ளேன்.



முன்னைய அரசாங்கம் பதவியில் இருந்த போது, கொழும்பு துறைமுக நகரம் தொடர்பாக செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அமைய நாட்டின் ஒரு பகுதி வெளிநாட்டு சக்திகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

நாம் பதவிக்கு வந்த பின்னர் அந்த உடன்பாட்டை மீளத் திருத்தினோம் என்றும் அவர் தெரிவித்தார். இந்த மே நாள் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். அத்துடன் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரி நிருபமா ராஜபக்ஷவும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கவனம் உங்கள் காலடிகள்

என் ஐரோப்பிய பயணத்தின் போது சுவிட்ஸர்லாந்தின் பனி மலைகளில் நடக்கப் பிரியப்பட்டேன். என் நண்பர் ஜெனிவா நரசிம்மன் அழைத்துப் போனார்.

பனியைக் கண்டதும் துள்ளிக் குதித்து நடக்க ஆரம்பித்தேன். நரசிம்மன் எச்சரித்தார். இந்த வெள்ளைப்பனிக்கட்டி ஏமாற்றும் தன்மை உடையது. பெரும் பள்ளங்களைக் கூட சாதாரணமாகவும் மேலோட்டமாகவும் மூடிக்கொண்டிருக்கும். காலை வைத்தால் தான் அது எவ்வளவு பெரிய பள்ளம் என்பது தெரியும். இந்தாருங்கள் இரும்புக்கோல் ஒவ்வோர் அடியையும் எடுத்து வைக்கும் முன்பு இந்த இரும்புக் கோலால் ஊன்றிப் பார்த்துக் கொள்ளுங்கள். அப்புறம் காலை வையுங்கள் என்றார்.

இதென்ன பயணக்கட்டுரையாகவும் சுயபுராணமாகவும் செல்கிறதே என்கிறீர்களா?

இல்லை. இதை இங்கு சொல்லக் காரணம் இருக்கிறது.

வாழ்க்கையில் மறைந்திருக்கும் பள்ளங்களை அறியாமல் காலடி எடுத்து வைத்து அதலபாதாளத்திற்குப் போய் விடுகிறார்களே பலர், அவர்கள் எனக்கு இந்தப் பனிமலையில் நினைவுக்கு வந்தார்கள்.

நம்முடைய ஒவ்வொரு காலடியும் (அதாவது) ஒவ்வொரு முடிவும் மிகக் கவனமாக எடுத்து வைக்கப்பட வேண்டும். நடக்கும் போது தவறாக எடுத்து வைக்கப்படும் காலடிகளால் கிடைக்கும் அடி சாதாரணமாகக்கூட இருந்துவிடும். நாளடைவில் குணமாகிவிடும். ஆனால் வாழ்க்கையின் தவறான அடிகள் (Wrong footing) முதுகெலும்பையே முறித்து மீண்டும் எழுந்து விடாமல் செய்து விடுவது உண்டு.

ஒவ்வொரு பெரிய முடிவை எடுக்கும் முன்பும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று அவசரப்பட்டுவிடாமல் ஆற அமரச் சிந்தித்து பலரையும் கலந்து, அனுபஸ்தர்களைக் கேட்டு எடுக்க வேண்டும்.

முகத்தைப் பார்த்து அழகான பெண்; அவள் தான் என் மனைவி என்று பிடிவாதம் காட்டித் திருமணம் செய்து கொள்கிறார்கள் சிலர். பிறகுதான் தெரிகிறது குணத்தில் அது குரங்கு என்று.

என்னத்திற்கு இந்த நிலம்! அதை விற்று காசாக்கிக் கூறைவிட்டவர், அதன் விலை பன்மடங்கு ஆகியதும், ஏகமாய் வருத்தப்படுகிறார் இப்போது, அப்போது முட்டாள் தனமாய் அவசரப்பட்டுவிட்டேன்? என்று புலம்புகிறார்.

எனக்கு இந்த வேலை பிடிக்க வில்லை என்று இராஜினாமா செய்த ஒருவர், அடுத்த வேலை இன்னமும் கிடைக்காமல் அவதிப்படுகிறார். இப்போது மாற்று வேலையை ஏற்பாடு செய்து கொண்டல்லவா வெளிவர வேண்டும்? இதுவும் ஒரு தவறான காலடி.

யாரோ சொன்னார்கள் என்று மனைவியின் நகைகளை விற்றுக் காலி செய்து, ஒரு மெக்கானிக் ஷெட்டைத் திறந்தார் ஒருவர். ஏதோ ஒரு வேகம். இனம்புரியாத துடிப்பு அவதிப்படுகிறார் இப்போது.

வாழ்வா? சாவா? என்கிற கேள்வியை எழுப்பக்கூடிய முடிவுகளை, ஆறப் போட்டும் ஊறப் போட்டும் சாதக பாதகங்களை அலசியும் எடுக்க வேண்டும்.

மீண்டும் சொல்கிறேன்,
கவனம்! உங்கள் காலடிகள்!

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

(28.04.2017 அன்று வெளியான வினாத்தாளின் தொடர்ச்சி)

11. 

இவ் வீதிச் சமிக்கை 'இங்கே ஒலி எழுப்பக்கூடாது' என்பதாகும். இதனைக் காணக்கூடிய மூன்று இடங்களின் பெயரைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.

1. ............................ 2. ...............................
3. ............................

♦ 12 தொடக்கம் 15 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.


12. பேரழிவுகளை ஏற்படுத்தும் காற்று எது?
(வாடைக்காற்று, தென்றல் காற்று, சூறாவளிக் காற்று)

13. 2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பேரழிவுக்கு காரணமாக அமைந்தது எது?
(உள்நாட்டு யுத்தம், கடற்பேரலை, வெள்ளப்பெருக்கு)


14. முட்டை இட்டு குஞ்சு பொரிப்பது எது?
(எலி, வெளவால், பல்லி)

15. நட்சத்திரங்கள் இரவில் தோன்றும் ஆனால் பகலில் தெரிவதில்லை. காரணம் யாது?
(சூரியவொளி மறைக்கிறது, பகலில் அழிந்துவிட்டன, சந்திரவொளி மறைக்கிறது.)

♦ கீழுள்ள எண்கோலங்களில் ? இடப்பட்ட இடத்திற்கு பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

16. 

1) 6 2) 5 3) 4

17. 

1) 34 2) 30 3) 28

♦ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளதாக அமைவதற்கு செய்ய வேண்டிய மாற்றத்தினை தெரிவு செய்க.

18. மீனவர்கள் வயலில் மீன் பிடிக்கின்றனர்.
1. மீனவர்கள் என்பதற்கு பதிலாக 'மாலுமிகள்' என மாற்ற வேண்டும்.
2. வயலில் என்பதற்கு பதிலாக 'கடலில்' என மாற்ற வேண்டும்.
3. பிடிக்கின்றனர் என்பதற்கு பதிலாக 'நீந்துகின்றனர்' என மாற்ற வேண்டும்.

19. அவலக் காட்சிகள் மனித மனத்துக்கு இன்பம் தருவன.
1. அவல என்ற சொல்லை 'இயற்கை' என மாற்ற வேண்டும்.
2. காட்சிகள் என்ற சொல்லை 'கூக்குரல்கள்' என மாற்ற வேண்டும்.
3. மனித என்ற சொல்லை 'குரங்கு' என மாற்ற வேண்டும்.

♦ வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

20. தம்பிக்கு அண்ணா போன்று தங்கைக்கு ..........................................
1. தம்பி 2. அண்ணா 3. அக்கா

21. கதிரையில் திரை போன்று மதுரையில் ..........................................
1. இந்தியா 2. துரை 3. மரை

ஒரு மின் அலங்காரச் சோடணையில் சிவப்பு, பச்சை, மஞ்சள் என மூன்று வகையான மின்குமிழ்த் தொடர்கள் ஒழுங்கில் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

22. அவற்றுள் 18 ஆவது மின்குமிழின் நிறம் யாது?
1. சிவப்பு 2. பச்சை 3. மஞ்சள்

23. அச்சோடணைத் தொடரில் 28 மின் குமிழ்கள் காணப்பட்டன ஆயின் அங்கிருந்த சிவப்பு நிறமின்குமிழ்களின் எண்ணிக்கை யாது?
1) 9 2) 10 3) 12

ஒரு பண்ணையில் உள்ள மாடுகளினதும், கோழிகளினதும் எண்ணிக்கை 12 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 32 ஆகும்.

24. பண்ணையில் உள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 8 3) 12

25. பண்ணையில் உள்ள மாடுகளின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 8 3) 12

♦ 26ஆம் 27 ஆம் வினாக்களில் பாடல்வரிகள் ஒழுங்கமைந்த விடையைத் தெரிவு செய்க.

26. A பயிரைச் செய்தல் போலக் B காலம் பார்க்க வேண்டும்
C பருவம் பார்த்து நாங்கள் D கருமம் தொடங்கும் போது
1. DBCA 2. CADB 3. ADBC

27.
○ கசியும் பசுவைப் போல
□ கன்றை நினைந்தே உள்ளம்
△ நாமும் நினைக்க வேண்டும்
✱ நன்றி புரிந்தோர் தம்மை

1. □○✱△ 2. ✱△□○ 3. □✱○△

அன்று போயா விடுமுறை தினம். எனது நண்பர்களுடன் பட்டம் விடுவதற்காக காலிமுகத்திடலுக்கு சென்றேன். அங்கே ஏராளமான சனக்கூட்டம் காணப்பட்டது. ஆகாயம் பல வர்ணப் பட்டங்களால் அலங்காரமாகக் காட்சியளித்தது. நாமும் எமது பட்டத்தை................

இதனைத் தொடர்ந்து மூன்று கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்.)

28. ..........................................................................................
29. ..........................................................................................
30. ..........................................................................................

♦ பின்வரும் வினாக்களின் வாக்கியங்களில் பொருத்தமான அடைமொழிகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

31. பேச்சாளர் பேசிக் கொண்டிருந்தபோது ஒலிபெருக்கி வேலை செய்யாததால் அவர் .................................. பேசினார்.

32. ஓவியப் போட்டியில் எல்லோரும் வரைந்த படங்களை விட நான்........................ படமே அழகாக இருந்தது.

33. காட்டின் நடுவில் உள்ள .................................... குளத்தில் தவளை ஒன்று வசித்து வந்தது.


34. குற்றம் பார்க்கில் .......................................................................... இல்லை.

35. அன்பான ...................................................................... ஆபத்தில் அறியலாம்.

36. அடக்கம் ஆயிரம் .............................................................................. தரும்.

♦ பின்வரும் வட்ட வரைபை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

பாடசாலை ஒன்றின் 60 மாணவர்களின் காலை உணவாக விரும்பும் உணவு வகைகள்.




37. இடியப்பத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
(.....................................................)

38. தோசையை விரும்பும் மாணவர்கள் எண்ணிக்கை 10 ஆயின் பாணை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
(.....................................................)

39. இட்லியை விரும்பும் மாணவர்களின் பங்கை பின்னத்தில் குறிப்பிடுக.
(.....................................................)

40. குறைந்தளவு மாணவர்கள் விரும்பும் உணவு எது?
(.....................................................)


## 28-04-2017 அன்று வெளியான வினாத்தாளின் விடைகள்


01) ஐயோ! என் கால்களை ஏதோ இழுக்கின்றது.
02) பெற்றோர் பிள்ளைகளைத் தண்டிப்பது நன்மையைத் தரும்
03) நான்கு கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன.
04) கழுத்தறுப்பு
05) - 09) வரை கருத்துள்ள வாக்கியங்கள்
10) 1) 0.3 2) 0.7 3) 0.5
11) சரியாக நிறந்தீட்டிய விடைகள்
12) 1) 0.7 2) 0.6 3) 0.9
13) 2
14) 2
15) 1
16) 3
17) , 18) காலம் உணர்த்தும் வாக்கியங்கள்
19) 6-860, 5-386, 9-45, 4-343, 8-6
20) 8-16, 16-32, 18-36, 10-20
21), 22) சரியாக நிறந்தீட்டிய விடைகள்
23) 3
24) 1
25) 2
26) 4
27) அபி கிரி பொழு
28) எனது தாயார் அழகானவள்
29) 3
30) 1
31) 1
32) 2
33) 3
34) 2
35) 1
36) வீடு, விளையாட்டு மைதானம், மகிழ்ச்சி, நீ
37) FRIEND, CHAIR, COME, GO
38) செவ்வகம்
39) சதுரமுகி
40) இரண்டு

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
# மாதிரி வினாத்தாள் பகுதி-1

♦ ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கீறிடுக.

முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க

1) 

2) 


♦ ஒவ்வொரு கவிதையிலும் உள்ள வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

03) காற்றே பூட்டிய கதவைத் திறக்காதே
அத்துமீறி உள்ளே நுழையாதே!
எரிகிற விளக்கை அணைக்காதே!
என்னுடைய படிப்பைக்...................
1) படிக்காதே! 2) குடிக்காதே! 3) குழப்பாதே!

04) பூமி அம்மா தன்னை மூடி
போர்த்திருக்கின்றாள் - அது
புதுமையான காற்று என்னும்
.........................................
1) போர்வையல்லவோ! 2) வெப்பமல்லவோ! 3) கருமையல்லவோ!

♦ தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீதொன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க

05) 

06) 

♦ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

07) தபாற் கந்தோரில் காசுக் கட்டளையை மாற்றினால் பிணம் கிடைக்கும்.
1) காசுக் கட்டளை என்பதற்குப் பதிலாக காசோலை என்பதை இடுதல் வேண்டும்.
2) பிணம் என்பதற்குப் பதிலாக பணம் என்பதை இடுதல் வேண்டும்.
3) தபாற் கந்தோர் என்பதற்குப் பதிலாக வங்கி என்பதை இடுதல் வேண்டும்.

08) அசையும் வலியே காற்று எனப்படும்.
1) அசையும் என்பதற்குப் பதிலாக அசையாது என்பதை இடுதல் வேண்டும்.
2) வலி என்பதற்குப் பதிலாக வளி என்பதை இடுதல் வேண்டும்.
3) காற்று என்பதற்குப் பதிலாக மேகம் என்பதை இடுதல் வேண்டும்.

♦ ஒவ்வொன்றும் ஒரு சதுர சென்ரி மீற்றர் பரப்பளவுள்ள 24 சதுரங்களை இவ்வுரு கொண்டுள்ளது.



09) அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரி மீற்றர்?
1) 6 2) 8 3) 10

10) அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவில் என்ன பின்னம்?
1) $\frac{1}{3}$ 2) $\frac{1}{4}$ 3) $\frac{1}{5}$

13) 100 இன் அரைவாசியின் $\frac{1}{5}$ உடன் 5ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?
1) 10 2) 15 3) 25

14) 100 இன் இரு மடங்கின் $\frac{1}{4}$ உடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?
1) 30 2) 55 3) 105

15) 20 தொடக்கம் 25 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 2 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
1) 5 2) 6 3) 7

16) 20 தொடக்கம் 25 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது எழுதப்படும் இலக்கங்களின் எண்ணிக்கை யாது?
1) 10 2) 12 3) 14

17) தற்பொழுது அருணின் வயது 18 ஆகும். அவனுடைய வயது சகோதரனின் வயதின் மூன்று மடங்காகும். அருணின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இருமடங்காக இருக்கும்?
1) 6 2) 8 3) 9

18) தற்பொழுது கமலாவின் வயது 8 ஆகும். அவளுடைய வயது சகோதரியின் வயதின் நான்கு மடங்காகும். கமலாவின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரியின் வயதின் இருமடங்காக இருக்கும்?
1) 3 2) 4 3) 6

19) ஒருவர் தன்னிடமிருந்த பணத்தில் $\frac{1}{3}$ ஐ மரக்கறிகள் வாங்கச் செலவு செய்தார். அதன் பின் இருந்த மீதிப்பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து அவற்றின் ஒரு பகுதியை மீன்கள் வாங்கச் செலவழித்தார். பின் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூபா 30 எனின், அவர் மரக்கறிகள் வாங்கச் செலவழித்த பணம் எவ்வளவு?
1) ரூபா 30 2) ரூபா 60 3) ரூபா 15

20) நான் என்னிடமிருந்த பணத்தில் $\frac{1}{2}$ ஐத் தாயிடமும், $\frac{1}{4}$ ஐத் தந்தையிடமும் கொடுத்த பின் இருந்த மீதிப் பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து அவற்றின் ஒரு பகுதியை தங்கையிடமும் கொடுத்தேன். தற்பொழுது என்னிடம் மீதியாக உள்ளது ரூபா 20 ஆகும். என்னிடம் ஆரம்பத்தில் இருந்த பணம் எவ்வளவு?
1) ரூபா 80 2) ரூபா 160 3) ரூபா 180


21) A, B, C, D எனும் நால்வர் விளையாட்டு மைதானத்தில் காணப்பட்டார்கள். அவர்கள் அணிந்திருந்த ஆடைகளின் நிறங்கள் குறித்த விபரம் வருமாறு.

A என்பவர் பச்சை, நீலம்.
B என்பவர் நீலம், மஞ்சள்
C என்பவர் மஞ்சள், நீலம்
D என்பவர் நீலம், வெள்ளை


நால்வரும் அணிந்திருந்த ஆடைகளின் நிறங்கள் எத்தனை?
1) 4 2) 6 3) 8

22) அமலா கமலாவிற்கு முன்னரே வாசிகசாலைக்கு வந்து விமலாவிற்கு பின்னரே சென்றாள். விமலா கமலாவிற்கு பின்னரே வாசிகசாலைக்கு வந்து அமலாவிற்கு முன்னரே சென்றாள். கமலா விமலாவிற்கு முன்னரே புறப்பட்டாள். கூடுதலான நேரம் வாசிகசாலையில் இருந்தவர் யார்?
1) அமலா 2) கமலா 3) விமலா

23) உருவில் உள்ள பொருள்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடைகளைத் தெரிவு செய்க.
1) 1. திறத்தல் 2. வரைதல் 3. எழுதுதல்
2) 1. உடைத்தல் 2. கீறுதல் 3. அடித்தல்
3) 1. திறத்தல் 2. வரைதல் 3. அடித்தல்



24) உருவில் உள்ள பிராணிகளுடன் தொடர்புபட்ட உணவுகள் முறையே இடம்பெறும் விடையைத்தெரிவு செய்க.
1) 1. மீன் 2. இறைச்சி 3. தானியம்
2) 1. இறைச்சி 2. புல் 3. தானியம்
3) 1. தானியம் 2. பூச்சிகள் 3. அரிசி



♦ பந்தியை வாசித்த பின் வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.

பேச்சுக்கலையில் ஒரு முக்கிய கூறு நகைச்சுவையாகப் பேசுவது ஆகும். நகைச்சுவையாகப் பேசும் போது சொல்ல வேண்டிய முக்கியமான கருத்தை மறந்துவிடக்கூடாது. மேலும், பிறருடைய மனம் புண்படாதவாறு பேசுவதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். நம்முடைய பேச்சு, பிறரைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் ஒன்றாக இருந்தால் அதுவே ஒரு பேச்சாளனுக்குக் கிடைக்கும் வெற்றியாகும்.

25) நகைச்சுவையாகப் பேசும் போது கவனத்தில் கொள்ள வேண்டியது யாது?
1) கேட்பவர் சிரிக்கும்படி பேச வேண்டும்.
2) கேட்பவர் மனம் நோகக் கூடாது.
3) பேசுபவர் மனம் நோகக் கூடாது.

26) நகைச்சுவைப் பேச்சில் முக்கியமல்லாதது எது?
1) கருத்தைக் கூறுதல்.
2) சிரித்துக் கொண்டு பேசுதல்.
3) சிந்திக்க வைத்தல்.

# ஐ.தே.க. தலைமையகத்தில் சூடு! பொலிஸ் கான்ஸ்டபிள் மறியலில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிளான இவர் மிரிஹான பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

இதன்படி, சந்தேகநபர் நேற்று நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையத்தில் இருந்த யானைச் சின்னத்தின் மீது, பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், கடமையின் நிமித்தம் வழங்கப்பட்ட துப்பாக்கியை பயன்படுத்தியே இந்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எதுஎவ்வாறு இருப்பினும், இது திட்டமிட்டு செய்யப்பட்ட காரியமா? அல்லது கவனயீனமாக துப்பாக்கி வெடித்ததா? என்பது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# கெட்டம்பே விளையாட்டு மைதானத்தை சுத்தம் செய்யும் பணியில் ஜனாதிபதி



(கொழும்பு)

சர்வதேச வெசாக் விழா கண்டி தலதாமாளிகை வளாகத்தில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "சூழல் புனிதமானது" என்ற நிகழ்ச்சித் திட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தலதாமாளிகையில் ஆரம்பமானது.

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் எண்ணக்கருவிற்கு ஏற்ப மத்திய மாகாண சபையினால் இந்நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கண்டி நகரத்தின் முக்கிய இடங்களை துப்புரவு செய்யும் பணி இதன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

தலதாமாளிகைக்கு வரும் பக்தர்கள் கைகளை கழுவுவதற்கான இரண்டு உபகரணங்கள் இதன்போது ஜனாதிபதியால் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேலவிடம் கையளிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் நடைபெற்ற கண்டி கெட்டம்பே விளையாட்டு மைதானத்திற்கு வருகைதந்த ஜனாதிபதி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து விளையாட்டு மைதானத்தை சுத்தம் செய்யும் பணியிலும் ஈடுபட்டார்.

அமைச்சர்களான மகிந்த அமரவீர, எஸ்.பீ.திஸாநாயக்க, பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மத்திய மாகாண ஆளுநர் நிலூக்கா ஏக்கநாயக்க ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (இ)

# தொழிலாளர்களை அடக்க முற்படாதீர்கள்

தற்போது நாட்டில் இடம்பெறும் தொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டங்களை சரத்பொன்சேகாவை கொண்டு அடக்க மைத்திரி ரணில் அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஆனால் எவராலும் தொழிலாளர்களை அடக்க முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் லால் காந்த தெரிவித்தார்.

தொழிலாளர்களை அடக்கும் முயற்சியை அரசாங்கம் கைவிடவேண்டும்என்று மைத்திரி-ரணில் அரசாங்கத்தை எச்சரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். கொழும்பு பீ ஆர் சீ. மைதானத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுக்கையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கொழும்பில் மேதினக் குப்பைகள்



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேதினக் கூட்டங்களுக்கு வெளிப்பிர தேசங்களிலிருந்து வருகை தந்த பல்லாயிரக்கணக்கானவர்கள் பயன்படுத்திய தண்ணீர் போத்தல் மற்றும் ஏனைய பொலித்தீன் பொருட்களினால் கொழும்பு நகரின் பல பகுதிகள் குப்பை மேடுகளாகக் காணப்பட்டன.

# குளத்தில் மூழ்கிய மாணவன் மரணம்

அம்பாறை, வாங்காமம் மலையடிக் குளத்தில் நீராடிய ஏறாவூரைச் சேர்ந்த செய்னுலாப்தீன் முஸ்தாக் அஹமட் (வயது-16) என்றமாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேதின விடுமுறையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது நண்பர்களுடன் சுற்றுலா சென்ற இம்மாணவன், குளத்தில் நீராடிக் கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கியுள்ளான். இம்மாணவனைக் காப்பாற்றுவதற்கு நண்பர்கள் முயற்சித்த போதும் அது கைகூடவில்லை. குளத்தில் நீராடிய இவர்களில் எவருக்கும் முறையாக நீச்சல் தெரிந்திருக்கவில்லை என்று விசாரணையில் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் கூறினர். ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியில் 11ஆம் ஆண்டில் இம்மாணவன் கல்வி கற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1061

Search for people, places and things    Nagendram Home


### நிர்மல்




### அனுசன்




### மதுரா




### தமீரா




### சுதன்




### டனித்தா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ‘ஆறுமுகனுக்கு அமைச்சுப் பதவி’

## அமைச்சர் அமரவீர தகவல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஆறுமுகன் தொண்டமானை ஒருபோதும் கைவிடாது. எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சி மன்றம் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல்களிலும், சு.க, இ.தொ.காவுடன் கைகோர்த்தே செயற்படும்” என மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். “எதிர்வரும் காலங்களில், ஆறுமுகன் தொண்டமானுக்கு சு.க.வினூடாக சிறந்த அமைச்சுப் பதவி வழங்கப்படும்” என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



இ.தொ.காவின் மேதினக் கூட்டம், கினிகத்ஹேன பிரதான பேருந்துதரிப்பு நிலையத்துக்கருகில், காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, “2020 ஆம் ஆண்டு இந்நாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, புதிய தனி ஆட்சியினை அமைக்கும். இந்த நாட்டில் எத்தனை அரசாங்கம் ஆட்சி அமைத்தாலும், சு.க.வுடன் தான் ஆறுமுகன் தொண்டமான் இருப்பார். நாம் ஆறுமுகத்தை ஒருபோதும் கைவிடமாட்டோம். ஆறுமுகன் எம்மை கைவிடமாட்டார் என்பது உறுதி. 2020ஆம் ஆண்டில் தனி ஆட்சி அமையும்போது, மலையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யக் கூடிய முக்கிய அமைச்சை, அமைச்சரவை அந்தஸ்துடன் வழங்க சு.க. தயாராகவுள்ளது. இ.தொ. காவை விட சிறந்தக் கட்சி, மலையக மக்களுக்கு வேறு ஏதும் இல்லை. எனவே, மலையக மக்களின் எதிர்கால வாழ்க்கை, சுபீட்சம் அடைய சு.க. ஒருபோதும் பின்வாங்காது. நாம் இ.தொ. காவை ஆதரிப்போம்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மதுபானசாலை உடைப்பு



(கொழும்பு)

காரைதீவு மதுபானசாலை இனந்தெரியாத நபர்களால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுபானசாலைக்கு முன்பாகவுள்ள வடிகானுக்குள் உடைக்கப்பட்ட பூட்டுக்கள் போடப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் அதனை கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, குறித்த மதுபானசாலையை அகற்ற வேண்டும் என பொதுநல அமைப்புக்கள் போர்க்கொடி தூக்கிவந்த நிலையில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

இந்த நிலையில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் இம் மதுபானசாலை வேறிடத்திற்கு மாற்றப்படலாமென அண்மையில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துருக்கி - இந்தியா இடையே மூன்று ஒப்பந்தம் கைச்சாத்து

துருக்கி ஜனாதிபதி எர்துவான் இரண்டு நாட்கள் பயணமாக இந்தியா வந்தார். இந்நிலையில் பிரதமர் மோடியை டில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் எர்துவான் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது, பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் நிலவும் இருதரப்பு உறவுகளை மறு ஆய்வு செய்தனர். தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதில் இருதரப்பு ஒத்துழைப்பை பலப்படுத்துவது மற்றும் அணுசக்தி விநியோக நாடுகள் குழுவில் உறுப்பினராக இணைய வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விவாதித்ததாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கிடையே, 3 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. பின்னர் இருதலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பிரதமர் மோடி கூறியதாவது,

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தீவிரவாத அச்சுறுத்தல், நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விடயமாகவுள்ளது. இதுகுறித்து துருக்கி ஜனாதிபதியுடன் விரிவாக ஆலோசனை நடத்தினேன். எந்த ஒரு நோக்கம் அல்லது இலக்கு அல்லது காரணத்துக்காகவும் தீவிரவாதத்தை அங்கீகரிக்கக் கூடாது என நாங்கள் ஒப்புக் கொண்டோம்.

மேலும் தீவிரவாத இயக்கங்களை ஒடுக்கவும், அவற்றுக்கு கிடைக்கும் நிதி ஆதாரங்களை தடுக்கவும், எல்லை தாண்டிய தீவிரவாதத்தை ஒடுக்கவும் உலக நாடுகள் இணைந்து செயற்பட வேண்டும். அத்துடன் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவு அளிப்பவர்கள் மற்றும் அடைக்கலம் கொடுப்பவர்கள் (பாகிஸ்தான்) மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, உலகம் முழுவதும் தீவிரவாதத்தை வேரறுப்பதற்காக, இருதரப்பு மற்றும் பல நாடுகளின் ஒத்துழைப்பை பலப்படுத்த ஒப்புக் கொண்டுள்ளோம்.

மேலும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்போது உலகில் வேகமாக வளரும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. இங்கு முதலீடு செய்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. முன்னெப்போதும் இல்லாத வகையில் முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் சுமார் ரூ. 39, 500 கோடியாகவுள்ளது. இதை ரூ.66,500 கோடியாக (10 பில்லியன் டொலர்) அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

பின்னர் துருக்கி ஜனாதிபதி எர்துவான் கூறும்போது, “தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இந்தியாவின் முயற்சிக்கு துருக்கி எப்போதும் உறு துணையாக இருக்கும் தீவிரவாதிகள் அனைவரும் இரத்த வெள்ளத்தில் மூழ்குவார்கள்” என்றார். (இ-3)

# தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



மாணவர்களுக்கு சீரான பேருந்து சேவையை ஏற்படுத்தி தருமாறு வலியுறுத்தி, இராகலை - நுவரெலியா பிரதான வீதியினை மறித்து கந்தப்பளை மற்றும் இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சென்ஜோன்ஸ் தோட்டத் தொழிலாளர்கள், நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். காலை 8 மணி முதல் முற்பகல் 10 மணி வரை இரண்டு மணிநேரம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தினால், இராகலை நுவரெலியா பிரதான வீதியின் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. (இ-7)

# விரைவில் அணுகுண்டு சோதனை

## வடகொரியா மீண்டும் மிரட்டல்

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் விதிக்கப்பட்ட பொருளாதார தடையை மீறிய வகையில் விரைவில் அணுகுண்டு சோதனை நடத்தப்போவதாக வடகொரியா மிரட்டியுள்ளது.

கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில்தத்தளித்து வரு கிறது.

இருப்பினும், கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமலும், சர்வ தேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

அந்தநாடு தொடர்ந்து 4 முறை அணுகுண்டு சோத னைகளை நடத்தியுள்ளது. அணுகுண்டை விட பல மடங்கு சக்திமிக்க ஐதரசன் குண்டையும் வெடித்து சோதித்தது.

இதுவும் அணுகுண்டு வகையில்தான் கணக்கில் கொள்ளப்படுகிறது. அதன்படி அந்நாடு இது வரை ஐந்து முறை அணுகுண்டு சோதனைகளை நடத்தியுள்ளதாக சர்வதேச நாடுகள் பதிவு செய்துள்ளன.

இதன்காரணமாக, வட கொரியா மீது ஐ.நா.பாது காப்பு சபையிலும் அமெரிக்காவும் மிகக்கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளன. ஆனாலும் அந்த நாடு, தற்காப்பு என்ற பெயரில் தொடர்ந்து ஏவு கணை சோதனைகளை விடாமல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், வடகொ ரியா என்ற தனிநாட்டை பிரித்து உருவாக்கிய (மறைந்த) கிம் யோ சுங்கின் 105 ஆவது பிறந்தநாள் விழா வையொட்டி வடகொரியா தலைநகரான பியாங்யாங் நகரில் சமீப த்தில் மாபெரும் இராணுவ அணிவகுப்பு நடத்தப்பட்டது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் முன்னிலையில் நடைபெற்ற இந்த அணிவகுப்பில் சக்தி வாய்ந்த போர் ஆயுதங்கள், இரா ணுவ டாங்கிகள் மற்றும் அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் அதிநவீன ஏவுகணைகள் ஆகியவை இடம்பெற்றிருந்தன. இந்த பிரமாண்ட அணிவகுப்பு அந்நாட்டு தொலைக்காட்சி களில் நேரடியாக ஒளிபரப்பாகியது.

இந்த அணிவகுப்பை தொடக்கி வைத்து உரை யாற்றிய அந்நாட்டின் இரண்டாம் நிலை தலைமை அதி காரியும், ஆளும்கட்சி தலைவரும், இராணுவ தளபதி யுமான சோய் ரியாங்-ஹே, வடகொரியா மீது தொடுக்க ப்படும் நேரிடையான எவ்வி த போரையும் நேரடியாக சந்திக்க நாம் தயாராக இரு க்கின்றோம் என்பதை இந்த அணி வகுப்பு உறுதிப்படுத் தும்.

நம்மீது நடத்தப்படும் அணு ஆயுத தாக்குதலுக் கும், நமக்கே உரிய பாணி யில் சரியான பதிலடி கொடுப் போம் என்று தெரிவித்தார்.

இந்த அணிவகுப்பை தொடர ந்து வெகு விரைவில் ஆறாவது முறையாக அணு ஆயுத பரிசோத னையில் வடகொரியா ஈடுபடக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், வடகொரி யாவின் அத்துமீறல் தொட ர்பாக நேற்று முன்தினம் கருத்து தெரி வித்த அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ர ம்ப், வடகொரியாவிற்கு எதி ராக இராணுவ ரீதியான நடவடிக்கை எடுக்கும் திட்டத்தை கைவிட்டு விட முடியாது என குறிப்பிட்டிருந் தார்.

இதற்கு நேற்று பதில ளித்துள்ள வடகொரிய நாட்டின் வெளி யுற வுத்துறை செய்தி தொடர்பாளர், அமெரி க்காவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள அணு ஆயுத தாக்கு தல் உள்ளிட்ட அனை த்துவகை தாக்குதலுக்கும் தங்கள் நாடு தங்க ளது நாடு தயார் நிலையில் இருப்ப தாக தெரிவித்துள்ளார்.

எங்கள் நாட்டு ஜனாதிபதி உத்த ரவிட்டால் எந்த நேரத் திலும், எந்த இடத்திலும் இருந்தும் தாக்குதலை தொட ங்க நாங்கள் தயாராக இரு க்கிறோம் என்றும் அவர் தெரி வித்தார். (இ-3)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 50 | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 55 | 110 | 110 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 90 | 120 | 130 | 160 | 100 |
| தக்காளி | 140 | 120 | 110 | 120 | 80 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 80 | 80 | 50 |
| கோவா | 130 | 200 | 120 | 80 | - | 160 | 100 |
| கரட் | 150 | 200 | 100 | 100 | 100 | 200 | 180 |
| பூசணி | 50 | 100 | 30 | 50 | 40 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 50 | 60 | 80 | 90 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 140 | 200 | 160 | 240 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 | 120 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 130 | 200 | 70 | 200 | 140 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 80 | 70 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 50 | 80 | - | 100 | 80 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 | 80 | 50 | 80 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 50 | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 140 | 100 | 100 | 100 | 140 | 160 | 140 |
| கறிமிளகாய் | 120 | 200 | 70 | 140 | 130 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 150 | 150-200 | 150 | 200 | 150 | 300 | 250 |
| போஞ்சி | 160 | 250 | 100 | 200 | 160 | 200 | 250 |
| கத்தரிதும்புள்ள | 90 | - | 30 | 60 | - | 60 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 20 | 40 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 50 | 60 | 40 | 70 | 50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 70 | 60 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 300 | 190 | 200 | 200 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 200 | 150 | - | - | - | - | 300 |
| முள்ளங்கி | 500 | 120 | - | 60 | 60 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 10 | - | - | - | - | - |

# தொழிற்சங்கங்களை தூண்டி விடுகின்றனர்

## காரியவசம் கவலை

"1977ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தி புரட்சியை விட பாரிய புரட்சியை 2020ஆம் ஆண்டு நாங்கள் ஏற்படுத்துவோம். விடுதலை புலிகள் அமைப்பு இல்லையென்றால் இந்த நாடு சிங்கப்பூர் மலேஷியாவை விட முன்னேறிச் சென்றிருக்கும்.

"விடுதலை புலிகள்போன்ற அமைப்புகளை மீண்டும் ஏற்படுத்தி எமது பொருளாதார பயணத்தை தடுத்து நிறுத்த முயற்சித்த ராஜபக்ஷ குழுவினர். அது முடியாததால் தொழிற்சங்கங்களை தூண்டிவிட்டு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்" என கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பொறளை, கெம்பல்மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.கவின் போக்கில் திடீர் மாற்றம்




ஐக்கிய தேசிய கட்சியின் மேதின பொதுக்கூட்டம் மருதானையிலிருந்து பேரணியாக ஆரம்பிக்கப்பட்டு கொழும்பு கெம்பல் பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த பேரணியில் பெருமளவான மக்கள் ஒன்றுதிரண்டிருந்தனர்.

இதன்போது அப்பகுதியில் வீசப்பட்ட குப்பைகளை அகற்றும் பணியில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இச்செயலானது ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் மேற்கொள்ளப்படும் ஒரு வரலாற்று மாற்றமாக கருதப்படுகின்றது. (இ-7)

# 'லலித் அத்துலத் முதலி படுகொலை முழு உண்மை' நூல் இன்று வெளியீடு




(கொழும்பு) ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான லலித் அத்துலத் முதலியின் படுகொலை பற்றிய முழுமையான தகவல்கள் அடங்கிய நூல் ஒன்று இன்று வெளியிடப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த லலித் அத்துலத் முதலி, ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தில் பதில் பாதுகாப்பு மற்றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சராகப் பதவி வகித்தவர். முதலாம் கட்ட ஈழப்போரை ஒடுக்குவதில் முன்னின்று செயற்பட்ட இவர் பின்னர், ரணசிங்க பிரேமதாசவுடன் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து, ஐ.தே.கவில் இருந்து வெளியேறி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சியை உருவாக்கினார்.

1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், லலித் அத்துலத் முதலி தேர்தல் பரப்புரையில் உரையாற்றிக் கொண்டிருந்த போது சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட அதேவேளை, அப்போதைய ஜனாதிபதி பிரேமதாச மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந்த நிலையில், 'லலித் அத்துலத்முதலி படுகொலை முழு உண்மை' என்ற தலைப்பிலான நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

தடயவியல் நிபுணர் ரவீந்திர பெர்னாண்டோ இந்த நூலை எழுதியுள்ளார்.

இந்த நூலில், லலித் அத்துலத் முதலியின் படுகொலை தொடர்பாக ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அறிக்கையும் இடம்பெற்றுள்ளது.

இன்று பிற்பகல் கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்வில், சட்டமா அதிபர் ஜெயந்த ஜயசூரிய இந்த நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார். (இ-7)

# கம்மன்பில வெளிநாடு செல்ல நீதிமன்றம் நேற்று அனுமதி



(கொழும்பு) பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வெளிநாடு செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது.

அமெரிக்காவில் இடம்பெறும் சமய நிகழ்வொன்றில் கலந்துகொள்ள அனுமதிக்குமாறு, கம்மன்பில தரப்பில் இருந்து கோரிக்கை முன்வைக்கப்பட்டது.


இம் மாதம் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இவர் வெளிநாடு செல்ல அனுமதி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி கே.கே. ஆர்.ஹெய்ந்துவ இதற்கு அனுமதியளித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கமைய தற்போது நீதிமன்றத்தின் பொறுப்பில் இருந்த கம்மன்பிலவின் கடவுச்சீட்டு இரண்டு இலட்சம் ரூபா தனிநபர் பிணையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடு திரும்பியதும் கடவுச்சீட்டை மீண்டும் நீதிமன்றத்திடம் ஒப்படைக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வெலிகம கடற்கரையில் இராட்சத திமிங்கிலம்



(கொழும்பு) வெலிகம, கும்புருகம கடல் பகுதியில் இராட்சத திமிங்கிலம் ஒன்று உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது. சுமார் 50 அடி நீளமான இந்த திமிங்கிலம் நேற்று முன்தினம் இரவு கரை ஒதுங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திமிங்கலத்தின் உடலில் பல இடங்களில் வெட்டுக் காயங்கள் உள்ளன. கப்பலில் மோதி காயமடைந்து இந்த திமிங்கலம் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (இ-7)

# இனவாத ஆட்சிக்கு ஆதரவானோர் காலி முகத்திடலில் கூடியிருந்தனர்

## மகிந்த அணியை விமர்சித்த விக்கிரமபாகு



நாட்டில் மீண்டும் பாஸிசவாத மற்றும் இனவாத ஆட்சியை ஏற்படுத்துவதற்கு கூட்டு எதிர்க்கட்சி திட்டமிட்டு வருகின்றது. அதற்கு ஆதரவானவர்களே காலிமுகத்திடலில் ஒன்று கூடினர். அதனால் நாட்டில் மீண்டும் ஜனநாயக விரோத ஆட்சியை ஏற்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

தொழிற்சங்கங்கள் மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் இணைந்து நுகேகொட ஆனந்த சமரகோன் திறந்த வெளியரங்கில் நேற்று முன்தினம் நடத்திய மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று நாட்டில் இருப்பது இரண்டு கூட்டங்களாகும். அவைதான் ஜனநாயக கூட்டமும் ஜனநாயக விரோத கூட்டமுமாகும். ஜனநாயக விரோத கூட்டம்தான் காலி முகத்திடலில் இடம்பெற்ற மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் மேதின கூட்டமாகும்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கடந்த அரசாங்கம் மேற்கொண்ட பாஸிசவாத ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்கே இவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

அத்துடன் அரசாங்கம் ஊழல் மோசடிக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கை மந்த கதியில் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஊடக வியலாளர் லசந்த விக்ரமதுங்க, எக்னெலிகொட போன்றவர்களின் கொலை மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று அரசியல் கைதிகள் விடயத்தில் அரசாங்கம் இன்னும் தீர்வொன்றை வழங்காமல் இருக்கின்றது.

மேலும் இந்த அரசாங்கத்தை அமைக்க இடதுசாரி கட்சிகள் முன்னின்று செயற்பட்டன. அதனால் அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம். குறிப்பாக சிறுபான்மை மக்களின் ஜனநாயக உரிமை மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்குதல் விடயம் தொடர்பாக அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் பிளவு?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் பிளவு நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக இவ்வாறு பிளவு நிலைமை ஏற்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைளடுக்கப்படவேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் ஒரு தரப்பு உறுப்பினர்கள் யோசனையை ஆதரித்துள்ள நிலையில் மற்றுமொரு தரப்பினர் இந்த யோசனைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக காலிமுகத் திடல் மைதானத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பங்கேற்ற கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின், உறுப்புரிமையை இரத்து செய்யும் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(இ-7)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

**பாவனைக்கு உட்பட்ட பொருட்கள் தொடர்பான ஏலக் கேள்வி அறிவித்தல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் பாவனைக்கு உட்பட்ட பொருட்களை ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 2017.05.16 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

2017.05.03 தொடக்கம் 2017.05.15 ஆம் திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் ரூபா 100.00 ஐ செலுத்தி பற்றுச் சீட்டினை 2017.05.03 ஆம் திகதி தொடக்கம் 2017.05.15ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

அ. வினோராஜ்
செயலாளர் - வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
03.05.2017

(C-8844)


# 2020 இல் ஆட்சி மாற்றம் உருவாகும்; அமைச்சர் தயாசிறியின் நம்பிக்கை இது



(கொழும்பு)

2020இல் ஆட்சி மாற்றம் உருவாகும் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை நம்பி வாழும் மலையக மக்களுக்கு வாழ்க்கையில் சுபீட்சம் ஏற்படும் எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

இ.தொ.காவின் மேதினம் நேற்று முன்தினம் கினிகத்தேனை நகரில் பிரதான பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் அந்த கட்சியின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதியின் விசேட பணிப்பின் கீழ் இ.தொ.காவின் மேதின விழாவில் வருகை தந்து எம்மை வரவேற்றதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் பேரணியில் நடந்து வந்து இம் மேதின கூட்டத்தில் கலந்து கொண்ட பெருமையை அடைகின்றோம்.

இலட்சத்திற்கு அதிகமான மக்கள் தொண்டர்களாக இ.தொ.காவுக்கு ஆதரவாக இருப்பதை எண்ணி பெருமைப்படுகின்றோம்.

அமரர். தொண்டமானின் காலத்தில் ஒரு ரூபாய் சம்பள உயர்வு முதல் மலையக மக்களுக்கு வாக்குரிமையை பெறுவதற்காக இரவு- பகலாக பாடுபட்டவர் தொண்டமான்.

இன்று 10 வருடங்களுக்கு மேலாக மலையக மக்களின் தேவையை ஒரு சில்லறைக் காசுக்குக் கூட அடிபணியாதும், விலை போகாத நிலையில் ஆறுமகன் தொண்டமான் மக்களின் சேவையை முன்னெடுக்கின்றார்.

எதிர்காலத்தில் மலையக மக்கள் சுபீட்சம் பெறுவதற்கு இந் நாட்டின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்து செயற்பட இ.தொ.காவும் துணை நிற்கின்றது.

ஆகையால் மலையக மக்கள் கஷ்டப்பட்டேனும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை ஆதரித்து எதிர்காலத்தில் சுபீட்சமான வாழ்க்கையை வாழ வழி சமைக்க வேண் டும் என்றார். (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா:சூரிசெவ் 7 ல்
உயரம்: 5’7"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7285

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 54செவ் 1 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/7286

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா. செவ் 7 ல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்:Dipolma in Eng/ அவுஸ்திரேலியா
தொ.இ: B/7292

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:செவ் 1 இல்
உயரம்: 6’
தகைமை/தொழில்:A/Lகட்டார்
தொ.இ: B/7295

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 21 செவ் 4 இல்
உயரம்: 151cm
தகைமை/தொழில்: BA/ஆசிரியர்
தொ.இ: G/6153

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 58 செவ் 4 இல்
உயரம்: 157cm
தகைமை/தொழில்: A/L/வங்கியாளர்
தொ.இ: G/6155

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 28 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6158

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 39 செவ் 2 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: B.Sc
தொ.இ: G/6164

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# ஆசிரிய உதவியாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி

தோட்டப் பாடசாலைகள் மற்றும் நாட்டில் வேறு பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர் உதவியாளர்களுக்கான கொடுப்பனவை பத்தாயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தோட்டப்பாடசாலைகள் மற்றும் நாட்டில் வேறு பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர் உதவியாளர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 10ஆயிரம் ரூபாவரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தினால் கோரப்பட்ட வேண்டுகோளின் பயனாகவே கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் ஆசிரியர் உதவியாளர்களின் கோரிக்கை மற்றும் நிலவும் வாழ்க்கைச் செலவை கருத்திற் கொண்டு கல்வி அமைச்சரினால் அமைச்சரவைக்கு முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன் பிரகாரம் இந்த கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் 2017 பெப்ரவரி முதலாம் ஆம் திகதி முதல் இது அமுலுக்கு வரும் வகையில் ஆசிரியர் உதவியாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## Yarl Beauty & Language's Skills College

YBLSC



மகளிருக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்
சனி, ஞாயிறு பிரிவுகள் 06.05.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 08.05.2017 அன்று 10.00 மணிக்கு
#சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டNVQ பாடத்திட்டம்.
#சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.



தமிழ் விளக்கத்துடன் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான "Deutsch" மொழி வகுப்புகள்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

பின்னாக்கைவிட எண்ணெய் சிறந்தது.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லாட்சியின் செலுட்டுத்தனம் மகிந்தவின் மே தினத்தில் தெரிந்தது

இப்போதெல்லாம் தொழிலாளர் தினம் என்பது தொழிலாளர்களின் உரிமைக்கான; ஊதியத்துக்கான; உழைப்புக்கான நாளாக இல்லாமல், அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களை அடையாளப்படுத்துகின்ற நாளாகிவிட்டது.

மே தினத்தில் அரசியல் கட்சிகள் நடத்துகின்ற ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் மக்கள் மத்தியில் தமக்கு இருக்கக்கூடிய செல்வாக்கை அரசியல் கட்சிகள் காட்டுகின்ற நாளாக மே தினத்தைக் கூறிக் கொள்ளலாம்.

அந்த வகையில், நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் ஏகப்பட்ட மக்கள் கூட்டம் கலந்து கொண்டமை பலரையும் மகிந்தவை நோக்கி திசை திருப்பியுள்ளது.

நல்லாட்சி என்ற பெயரில் தேசிய அரசு ஆட்சி செய்கின்ற வேளையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மே தினக் கூட்டத்தில் காலிமுகத்திடலில் அலையென மக்கள் கூட்டம் திரண்டமை மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி மீது எங்களுக்கு விருப்பம் இருக்கிறது என்பதை தென்பகுதி மக்கள் காட்டுவதாகப் பொருள்படுத்தலாம். அவ்வாறு பொருள் படுத்துவது பொருத்தமானதல்ல எனில்,

ஜனாதிபதி மைத்திரி – பிரதமர் ரணில் ஆட்சியில் எங்களுக்கு திருப்தியில்லை என்பதைக் காட்டுவதற்காகவே மகிந்தவின் மே தினத்தை நாம் பயன்படுத்திக் கொண்டோம் என்று தென்பகுதி மக்கள் கூறுவதாகவும் பொருள்படுத்தலாம்.

எதுஎவ்வாறாயினும் நேற்று முன்தினம் காலிமுகத்திடலில் நடந்த மகிந்த ராஜபக்ஷவின் மே தினக் கூட்டத்தில், அலைகடலென திரண்ட மக்களின் ஆதங்கமெல்லாம் நல்லாட்சி என்பது ஒரு ஆளுமையானது அல்ல என்பதுதான்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு இன்று வரை தீர்வு காணப்படவில்லை. மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் போடப்பட்ட வீதிக்குப் பின்னர் வீதி திருத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

எதிலும் மந்த கதி; பொருட்களின் விலை ஏற்றம், திணைக்களங்கள்; அரச கூட்டுத்தாபனங்களிடம் வினைத்திறனும் இல்லை. எந்த முறைப்பாட்டுக்கும் உரிய நடவடிக்கை இல்லை. விரைவு, வேகம் என்ற பேச்சுக்கே நல்லாட்சியில் இடமில்லை.

அரச வேலைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்ட போதிலும் அவற்றின் பெறுபேறுகளும் வெளிவரவில்லை. நியமனங்களும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் நல்லாட்சி என்பது சேடம் இழுக்கின்ற ஆரோக்கியத்திலேயே இருப்பதாகத் தென்பகுதி மக்கள் கருதுகின்றனர்.

மறுபுறத்தில் தமிழர் தாயகத்தில் உள்ள எத்தன்னயோ பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. வடக்கு கிழக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுக்கான தீர்வு முன்வைக்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்படுகிறது.

மகிந்த தரப்புக்கு பயந்த வண்ணம் நல்லாட்சி செயற்படுவதாக இருந்தால், மகிந்தவே ஆட்சி செய்யட்டும் என்று தென்பகுதி மக்கள் நினைத்திருக்க முடியும்

ஆக, மகிந்த ராஜபக்ஷவின் மே தினக் கூட்டம் நல்லாட்சிக்கான வால் முறுக்கல். இதை உணர்ந்தால் உய்வுண்டு. இல்லையேல் அடுத்த தேர்தலில் ஆசியாவின் ஆச்சரியம்தான் மீண்டும் ஆட்சி செய்வது தவிர்க்க முடியாததாகி விடும்.

## ரஷ்ய பொருளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்குமாறு றிசாத்துக்கு அழைப்பு

(கொழும்பு)

ரஷ்யா, சென் பீட்டர்ஸ் பேர்க்கில் நடைபெறும் சர்வதேச பொருளாதார மன்ற மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீனைக் கலந்து கொள்ளுமாறு அந்த நாட்டின் பிரதிப் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம், 2 ஆம் மற்றும் 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கைத்தொழில் வர்த்தக அமைச்சுக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த இலங்கைக்கான ரஷ்யாவின் தூதுவர் அலெக்ஸாண்டர் கார்ச்சேவ் அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் இந்த அழைப்பை நேரடியாக கையளித்துள்ளார்.

ரஷ்யத் தூதுவருக்கும், அமைச்சர் றிசாத் பதியுதீனுக்குமிடையிலான இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் பரஸ்பர வர்த்தகம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 5ம் திகதி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

சைட்டம்நிறுவனம் தொடர்பான பிரச்சினையை முன்னிலைப்படுத்தி எதிர்வரும் 5ஆம் திகதி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உப செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த நடவடிக்கையில் சுகாதார, கல்வி மற்றும போக்குவரத்து போன்ற துறைகளிலுள்ள தொழிற் சங்கங்களும் இணைந்து கொள்ளவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நேற்று ஹோமாகம வைத்தியசாலை முன்னால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

சைட்டம் நிறுவன மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக ஹோமாகம வைத்தியசாலையை வழங்கும் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் கலந்து கொண்ட போதே அந்த சங்கத்தின் உப செயலாளர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில கொல்லங்கலட்டி, வித்தகபுரம், மாவை கலட்டி, கீரிமலை, கூவில், நல்லிணக்கபுரம், கீரிமலை சந்தி கடற்படைமுகாம்ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தேக்கவத்தை பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில் பரப்புக்கடந்தான் பிரதேசம், பரப்பாங் கண்டல் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**பெண்ணுக்கு ஆணின் கடமை என்ன?**

பெண் என்பவள் குடும்பத்தில் ஒளி பரவச் செய்யும் விளக்காவாள். அவள் தேவியாவாள. குடும்பத்திற்கு வெளிச் சம் பரவச் செய்யும் பெண் ணிடத்தில் அன்பு செலுத்தி ஆதரவு காட்டி நல்ல காரியங்கள் செய்வதற்கு உதவிகரமாக இருக்க வேண்டியது கணவன்கடமையாகும். கணவன் மனைவி இருவரும்ஒற்றுமையுடன், ஒத்த கருத்துடன், தெய்வ பக்தியுடன் தர் மங்களைக் கடைப்பிடித்தால் மட்டுமேகுடும்பவாழ்க்கை வெற்றி பெறும்(தொடரும்)




## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## எல்லாம் கடவுள் செயல்



✦ தற்பெருமை கொண்டவன் கடவுளின் அருளைப் பெற முடியாது. பணிவு உள்ளவனையே கடவுள் விரும்புகிறார்.

✦ மனிதப்பிறவி மகத்தானது. இதில் கடவுளை அறிய முயலாவிட்டால், மனித வாழ்வு அர்த்தமில்லாத தாகி விடும்.

✦ மனிதனுக்கு கர்வம் ஏற்படுவதாக இருந்தால், "நான் கடவுளின் தொண்டன்" அல்லது "குழந்தை" என்ற எண்ணத்தால் உண்டாகட்டும்.

✦ கடவுளின் கையில் இருக்கும் கருவியாக மாறி விடுங்கள். அப்போது நீங்கள் செய்யும் செயல் அனைத்தும் கடவுளின் செயலாகவே ஆகி விடும்.

## கருத்தரங்கு

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் (JMF) "பொருளாதார மற்றும் தொழில் நுட்ப கூட்டுறவு உடன்படிக்கை சவால்கள்" தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. நாளை வியாழக்கிழமை மாலை 4.30 இற்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் வளவாளராக பேராசிரியர் றொகான் சமரஜீவா கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## எடப்பாடி கடிதம்!

அண்மையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்கள் ஐவரை 'கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி இலங்கை கடற்படை கைது செய்தது.

இதன்படி இவர்களை விடுவிக்க இலங்கை ஜனாதிபதியிடம் பேசி ஆவண செய்ய வேண்டும் என தமிழக முதலவர் தனது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## சாஸ்திரங்கள்

✦ பிறரைத் தண்டிப்பதில் மகிழ்வும் அக்கிரமமான எண்ணங்களையும் உடையவர்கள் ராட்சதப் பன்றியின் வாயில் இட்டு அரைபடுவது.

-பன்றி மூகம் (கருடபுராணம்)

✦ தான் மட்டும் உண்டு பிறரைத் துளைக்கும் கிருமிகள் போல வாழ்ந்து பக்தி, நியமம் முதலிய நல்லொழுக்கங்கள் இல்லாமல் வாழ்ந்தவர்களை கொடிய விஷக்கிருமிகள் பற்றி வதைப்பது.

-கிருமிபோஜனம் (கருடபுராணம்)

## டெங்கு ஒழிப்புக்கான தேசிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சு முன்னெடுக்கும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துமாறு சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இவ்வருடத்தில் 33 ஆயிரத்து 151 டெங்கு நோயாளர்கள் இதுவரையில் இனங் காணப்பட்டுள்ளார்கள். இதில் 61 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, கண்டி, யாழ்ப்பாணம், களுத்துறை, குருநாகல், புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை ஆகிய பன்னிரெண்டு மாவட்டங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுகிறது.

இந்த மாவட்டங்களில் டெங்கு நோய் ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படும். இதற்காக கல்வி அமைச்சின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளை சுத்தப்படுத்தியதன் பின்னர் பொலிஸாரும், சுகாதார அதிகாரிகளும் அது தொடர்பான அறிக்கைகளை உறுதிப்படுத்தி சமர்ப்பிப்பது அவசியமாகும்.

டெங்கு நுளம்புக் குடம்பிகள் இருக்குமாயின், அதனை ஒரு மாதத்திற்குள் அழிப்பதற்கான அவகாசம் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்படும்.

இந்தக் காலப்பகுதியில் இதனை மேற்கொள்ளத் தவறும் அதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மலையக மக்களின் இடங்கள் விரைவில் பறிபோகும் நிலை

### முத்து சிவலிங்கம் அச்சம்

(கொழும்பு)

மலையக மக்களின் இருப்புரிமை இடங்களை கையகபடுத்தி எதிர்காலத்தில் அவர்களை கைவிடும் நிலை உருவாகுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

மலையக மக்கள் நடந்து வந்த பாதை வேறு, தற்போது நடக்கின்ற பாதை வேறு. ஆனால், ஒருபோதும் அந்த செயற்பாட்டிற்கு இடமளிக்க மாட்டோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணம் - 2017 ஜொனியன்ஸ் அரை இறுதிக்கு தெரிவு



கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 24ஆவது வருடமாக நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட சுற்றுப் போட்டித் தொடரில் 19ஆவது போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி, யாழ்.பல்கலைக்கழக அணியை 48 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 29.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களை பெற்றது.

அன்புஜன் - 12, ஹரிபிரவீன் - 14, கொால்வஸ்கி - 68, லவேந்திரா - 60, விதுஸன் - 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜனன்தன் - 05, துவாரக்சீலன், லோகதிஸ்வர் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 26.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 150 ஓட்டங்களை பெற்றனர்.

துவாரகீலன் - 40, ருக்ஸ்மன் - 16, தரக - 49 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் சன்சஜன் - 03, லவேந்திரா, றஜின்தன் தலா - 02 இலக்குகளையும், கஜீவன், டக்ஸன் தலா - 01 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு யாழ்.ஜொனியன்ஸ் அணி 6.46 புள்ளிகளையும் யாழ்.பல்கலைக் கழக அணி 2.50 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)



காரைநகர் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய காரைநகரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற Challengers Trophy 2017 ற்கான போட்டியில் காரைநகர் கோவளம் விளையாட்டுக்கழகம் முதலிடத்தை பெற்றுக் கொண்டது.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மாகாணமட்ட கிரிக்கெட் வட மாகாண அணி வெற்றி

19 வயதிற்குட்பட்ட மாகாண அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடருக்கான நான்கு போட்டிகள் (31.04.2017) அன்று இடம்பெற்றது.

நடைபெற்ற போட்டியில் வட மாகாண அணியை எதிர்த்து வட மேல் மாகாண அணி மோதியது.

கொழும்பு. சிசிசி மைதானத்தில் நடைபெற்ற இவ்விரு அணிகளுக்கிடையிலான போட்டியில், வட மேல் மாகாண அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வட மேல் மாகாண அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

அந்த வகையில் களமிறங்கிய வட மாகாண அணி, எதிரணியின் அதிரடிப் பந்து வீச்சில் 24 ஓவர்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 75 ஓட்டங்களுக்கு சுருண்டது. சிறப்பாக பந்து வீசிய ரந்தீர ரணசிங்க 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அதனையடுத்து இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பாடிய வட மேல் மாகாண அணிக்கு குறித்த இலக்கை எட்டுவது இலகுவாக அமையவில்லை., ஆரம்பத்தில் தொடர்ந்து 4 விக்கெட்டுகளை இழந்து இக்கட்டான சூழ்நிலையில் அணி இருந்தபோது களமிறங்கிய கவிந்து இஷாரா மற்றும் துலாஜ் ரணதுங்க ஆகியோர் இணைந்து முறிக்கப்படாத 49 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று அணியை வெற்றிப்பாதைக்கு வழி நடத்தினர்.

எனினும் எதிரணிக்கு கடும் சவால் கொடுத்த யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர் கபில்ராஜ் 2 விக்கெட்டுக்களை பதம் பார்த்தார். (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III ஹாட்லியைற்ஸ் 2ஆவது வெற்றி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு சுற்றுப் போட்டிக்கு யாழ்.நகரில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்காக தகுதிகாண் போட்டிகள் வரிசையில் 11ஆவது போட்டியில் ஹாட்லியைற்ஸ் அணி ஸ்கந்தாஸ்ரார் அணியை 205 ஓட்டங்களால் வெற்றிபெற்று தனது 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.



முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 47.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 264 ஓட்டங்களை பெற்றது.

மணிமாறன் - 41, சஞ்ஜீவன் - 10, சதீஸ்ராம் - 89, தீபன் - 21, கீர்த்திகன் - 11 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் நிரோஸன் - 01, சிந்துஜன் - 03, சன்ஜெயன் - 02, கதியோன், துவாரகன் தலா - 01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தஸ்ரார் அணி 17.3 ஓவர்களில் 59 ஓட்டங்களை பெற்றது. றொபேட் - 18 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் பிரதிப் - 03, செயோன் - 02, சதீஸ்ராம் - 04 இலக்குகளை கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ் சென்றல் விளையாட்டுக்கழகம் ஆவது வருடமாக நடத்திவரும் தரவரிசை பட்டியலுக்கு ஹாட்லியைற்ஸ் அணி 10.73 புள்ளிகளையும், ஸ்கந்தாஸ்ரார் அணி 1.59 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. (க)

# கரவெட்டி பிரதேச செயலக அணியை வீழ்த்தி பருத்தித்துறை பிரதேச செயலக அணி சம்பியன்





பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட அளவிலான ஆண்களுக்கான கபடி போட்டி (30.04.2017) அன்று இடம்பெற்றது.

பரபரப்பாக நடைபெற்றபோட்டியில் முதலாவது இடத்தை பருத்தித்துறை பிரதேசசெயலகஅணியும் இரண்டாம் இடத்தை கரவெட்டி பிரதேச செயலகஅணியும் பெற்றுக்கொண்டது.

கரவெட்டி பிரதேச செயலகம்சார்பாக மைக்கல் விளையாட்டுக்கழக வீரர்கள் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. (க)

# நிறோஜனின் ஹெற்றிக் கோல் யங்கம்பன்ஸ் அசத்தல் வெற்றி



கரவெட்டி பிரதேச இளைஞர்விளையாட்டு விழா-2017 (30.04.2017) அன்று காலை மனோகரா வி.கழக மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியில் கரணவாய் மத்தி அணியை 06:00 என்ற ரீதியில் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது யங்கம்பன்ஸ் அணி.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக நிறோஜன்-03,தர்சன் -02,கோபி - 01 கோல் போட்டனர்.

அடுத்த போட்டி யில் தொடர்ந்து டயமன்ஸ் அணியை எதிர் கொள்கின்றது யங்கம்பன்ஸ் அணி. (க)

## பிரிவை தாங்காது...

தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட பூநகரி பொலிஸ் பரிசோதகர் கொண்ட குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

முன்னதாக இவரது கணவர் கணேசமூர்த்தி கலைச்செல்வன் (வயது 34) என்பவர் கடந்த 28ஆம் திகதி வீட்டினுள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து கணவனின் மரணம் தொடர்பில் விரக்தியடைந்த மனைவி கவிதாவும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்ற பதில் நீதவான் மற்றும் கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி வி.திருலோகமூர்த்தி ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (செ-2,5,84)

## 6 பேருக்கு பிணை...

செழியன், ஹெரோயினுடன் கைதானவரின் பிணை மனுவை இரத்து செய்துள்ளார்.

கஞ்சாவை தமது உடமையில் வைத்திருந்தமைக்காக போதைவஸ்து கட்டளை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்த 6 பேருக்கு அவர்களது சட்டத்தரணியால் நேற்றைய தினம் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதனை பரிசீலித்த நீதிபதி.

கடந்த 2016.12.19 ஆம் திகதி 610 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 25 ஆயிரம் ரூபாய் காசுப்பிணை மற்றும் தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 2 சரீர பிணையில் செல்லுமாறும், கடந்த 2016.10.04 அன்று 2 கிலோ 62 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 25 ஆயிரம் ரூபாய் காசுப் பிணை மற்றும் தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 2 சரீர பிணையில் செல்லுமாறும், கடந்த 2016.09.06 அன்று 8 கிலோ 185 கிராம் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்தாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபாய் காசு பிணை மற்றும் தலா ஒரு லட்சம் பெறுமதியுடைய சரீர பிணையில் செல்லுமாறும், கடந்த 2017.01.24 ஆம் திகதி அன்று 1420 மில்லிகிராம் கஞ்சாவை விற்பனைக்கும் 2900 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபாய் காசுப்பிணை மற்றும் 25 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் செல்லுமாறும் நீதிபதி உத்தரவிட்டார்

இதேவேளை 45 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவருக்கு பிணை விண்ணப்பம் மன்றில் முன்வைக்கப்பட்டது. சந்தேக நபருடைய நன்னடத்தை குறித்து ஊராருடைய கையொப்பங்களை உள்ளடக்கிய கடிதம் ஒன்றினை அவரது மனைவி நீதிபதியிடம் சமர்ப்பித்திருந்தார்.

அக் கடிதத்தை மறுத்த நீதிபதி, 2 கிராம் ஹெரோயினுடன் கைதான நபருக்கே 7வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. இது பாரிய குற்றம் இதற்கு பிணை வழங்க முடியாது. குற்றம் செய்ய வில்லை எனில் வழக்கை நடத்தி வாதாடுங்கள். இவ்வாறான கடிதங்கள் மன்றுக்கு தேவையில்லை. இக் குற்றத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்களுக்கு சாதகமாக கடிதங்கள் எழுதி அதில் கையொப்பங்கள் இடுபவர்களும் கைது செய்யப்படுவார்கள் என எச்சரித்து அவருடைய பிணை மனுவை இரத்து செய்தார். (செ-9)

## முன்னாள் போராளி...

கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டதாக தெரிவித்து முன்னாள் போராளிகள் 5 பேர் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி நேற்றைய தினம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி தில்லைநாதன் அர்சுனா மன்றில் ஆஜராகி சந்தேக நபர்கள் ஐந்து பேருக்குமான பிணை விண்ணப்பத்தினை செய்திருந்தார்.

அவர் தனது பிணை மனுவில் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டதாக தெரிவித்து முன்னாள் போராளிகள் 5 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள் அவர்கள் தொடர்பான வழக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. 5 சந்தேக நபர்களுக்கு எதிரான மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பி அறிக்கையிலும் அதன் பின்னர் தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு அறிக்கைகளிலும் பல்வேறு சட்டவாக்கங்களுக்கு கீழ் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அதில் முதலாவதாக அபாயகர ஆயுதங்கள் சட்டத்தின் கீழும் இரண்டாவதாக நஞ்சுகள் அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் சட்டத்தின் கீழும் மூன்றாவதாக பணப்பரிமாற்ற சட்டத்தின் கீழும், நான்காவதாக பயங்கரவாதிகள் சமவாயரீதியாக நிதி வழங்குதல் தொடர்பான சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டுக்குள் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது.

இதில் பணக் கைமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு பணம் வழங்குதல் போன்ற சட்டங்களுக்கு கீழான குற்றச்சாட்டுக்களுக்கு பிணை வழங்குவதற்கு நீதவான் நீதிமன்றுக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் அபாயகர ஆயுதங்கள் சட்டம் மற்றும் நஞ்சுகள் அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் சட்டத்தின் கீழ் சாட்டப்பட்ட குற்றங்களுக்கு பிணை வழங்கும் அதிகாரம் மேல் நீதிமன்றுக்கு தான் உள்ளது.

அதை தவிர மேல் நீதிமன்றால் விடுதலை செய்ய முடியாத எந்த சட்ட பிரிவின் கீழும் இவர்களுக்கான குற்றச்சாட்டுக்கள் எவையும் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்படவில்லை. அவ்வாறு இருப்பினும் வழக்கு தொடுநர் தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு குற்றச்சாட்டு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கொலை செய்ய திட்டம் தீட்டியுள்ளார்கள் என்பது மட்டுமே.

ஆனால் அக் குற்றத்தை சந்தேக நபர்கள் முற்று முழுதாக மறுத்துள்ளார்கள். இந்த வழக்கில் அவர்கள் சந்தேக நபர்கள் ஆக்கப்பட்டதற்கு ஒரே ஒரு காரணம் இவர்கள் முன்னாள் போராளிகள் என்பது மட்டுமே. அதனால் அவர்களை பழிவாங்குவதற்காக தான் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக சந்தேக நபர்கள் திடமாக தெரிவித்துள்ளார்கள்.

ஆகவே இப் பிணை விண்ணப்பத்தை நீதிமன்று ஏற்றுக்கொண்டு எதிர் மனுதாரர்களான குற்றத்தடுப்பு பிரிவுக்கும் சட்டமா அதிபருக்கும் அறிவித்தல் இடுமாறு மன்றில் விண்ணப்பித்தார்.

பிணை மனுவை ஏற்றுக்கொண்ட யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி குறித்த வழக்கினை வழக்கு தொடுநர்தரப்பின் ஆட்சேபனையை தெரிவிப்பதற்கு எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (செ-9)

## 30 பேரும் தடுப்பில்...

ஞாயிற்றுக்கிழமை காலை காங்கேசன்துறை கடற்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த மியன்மார் நாட்டை சேர்ந்த 30பேரை இந்திய மீனவர்கள் இருவர் காப்பாற்ற முயன்றிருந்தனர். இதன்போது அங்கு சென்ற காங்கேசன்துறை கடற்படை முகாமை சேர்ந்த கடற்படையினர் அவர்கள் அனைவரையும பாதுகாப்பாக மீட்டு காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். இதில் 6 குடும்பங்களை சேர்ந்த 16 சிறுவர்களும், 7ஆண்களும் 7பெண்களும் காணப்பட்டதுடன் இவர்களில் ஒருவர் திருமணமாகாத பெண்ணும் மற்றுமொருவர் கர்ப்பிணி பெண்ணாகவும் காணப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்களை மீண்டும் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் சிறைச்சாலை அதிகாரிகள் முற்படுத்தியிருந்தனர். இதன்போது காங்கேசன்துறை பொலிஸார் இவர்கள் மீது குடிவரவு குடியகல்வு சட்டத்தின் 45 சி பிரிவின் கீழ் பி அறிக்கையொன்றையும் மன்றில் சமர்பித்திருந்தனர். இதேவேளை ஆசிய பசுபிக் பிராந்திய அகதிகள் குழுமத்தினர், சிவில் அமைப்புக்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சட்டப்பிரிவு ஆகியோர் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய இவ் மியன்மார் முஸ்லிம் அகதிகள் சார்பில் சட்டத்தரணி ருஸ்தி ஹபீப் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

மன்றில் முன்னிலையான சட்டத்தரணி இலங்கையானது அகதிகள் அந்தஸ்து உடன படிக்கையில் கைச்சாத்திடாத போதும், 2005 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் அகதிகள் அமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் புகலிடம் வழங்க கூடிய நாட்டுக்கு அனுப்ப வைக்கும் வரை இவர்களை மிரிஹானை தடுப்பு முகாமிற்கு அனுப்ப வேண்டும் என கோரியிருந்தார். அத்துடன் இவ் வழக்கு நடவடிக்கையும் மிரிஹானை பகுதிக்கு அண்மையான நீதிமன்றுக்கு மாற்ற வேண்டும்.

இவ்வாறு செய்வதனூடாக இவர்களுக்கு சர்வதேச ரீதியான அகதிகள் அந்தஸ்தும், பாதுகாப்பும் கிடைக்கும் எனவும், ஐக்கிய நாடுகள் அகதிகள் அமைப்பினூடாக அகதி அந்தஸ்து வழங்கக்கூடிய வேறொரு நாட்டிற்கு அனுப்ப முடியும் எனவும் அவர் மன்றில் குறிப்பிட்டிருந்தார். இதனை தொடர்ந்து குறித்த மியன்மார் தேசத்தவர்களை மனிதாபிமானத்துடன் பார்த்த நீதவான் கைதான அனைவரையும் யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தி மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் உடனடியாக மிரிஹானை தடுப்பு முகாமிற்கு மாற்றுமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் அவர்களது உணவு காலாசாரமானது எம்மில் இருந்து வேறுபட்டதாக உள்ளமையால் அவர்களுக்கு தரமான உலர் உணவுகளை வழங்கவும் உத்தரவிட்டிருந்தார். மேலும் அவர்களை காப்பாற்றிய இரண்டு இந்திய மீனவர்களையும் விடுதலை செய்வதற்கான சட்டமா அதிபர் திணைக்கள உத்தரவு கிடைக்கப்படும் வரை தடுத்து வைக்கவும் நீதவான் கருணாகரன் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் வழக்கு நடவடிக்கையானது மிரிஹானை பகுதிக்கு அண்மையான நீதிமன்றுக்கு மாற்றுவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களமே முடிவெடுக்க வேண்டும் எனவும் நீதவான் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை குறித்த 30 மியன்மார் நாட்டை சேர்ந்த 30 முஸ்லிம் மக்களும் கடந்த 2012ஆம் ஆண்டு அங்கு காணப்பட்ட இன ஒடுக்கு முறை காரணமாக புகலிடம் கோரி இந்தியாவிற்கு சென்றிருந்தனர். அங்கு இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் மீது வழக்கு இடம்பெற்று அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்கள் புகலிடம் கோரி இலங்கை கடல்எல்லைக்குள் நுழைந்த போதே விபத்தில் சிக்கிய நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(செ-4)

## சமஷ்டி முறையான...

மன்னாரில் நேற்றைய தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபின் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

அரசியல் அமைப்பு திட்டம் நாட்டினுடைய நடைமுறைகளை செயற்படுத்திக் கொண்டிருக்கும் திட்டமாகும். அதனுடைய வரைபின் அடிப்படையில் நாட்டின் அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது மிக முக்கியமான தொன்று.

அதை நாம் மாற்றாமல் பல நடவடிக்கைகளை எடுப்பதற்கு பார்க்கிறோம். அதனால் விளைவு என்னவென்றால், உண்மையான உரித்துக்கள் அரசியல் யாப்பின் கீழ் எமக்கு கிடைக்காமல், ஒரு சில உரித்துக்களை வெறுமையாக தான்தோன்றி தனமாக அரசியல்வாதிகள் எமக்கு தரும் போது அதற்கு உண்மையான சட்ட வலு இல்லாமல் போய்விடும்.

அதற்கு உண்மையான சட்ட வலு இருக்க வேண்டும் என்றால் அரசியல் யாப்பு திருத்தம் கட்டாயம் அவசியம். அதனால் தான் அரசியில் யாப்பில் ஒரு சமஸ்டி முறைமை இருக்க வேண்டும் என்றும் வடகிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அபிப்பிராய வாக்கெடுப்பு தமிழ் மக்களுக்கு சாதகமாகவா பாதகமாகவா அமையும் என்பது அவ் வாக்கெடுப்பு என்ன விதமாக நடக்கும் என்பதில் தான் அமையப்போகிறது. தமிழ் மக்களுக்கு உரித்துக்கள் கொடுக்க வேண்டும் என கூறும் போது சிங்கள மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்பது எனது கணிப்பு. ஒரு சில குறைந்த உரிமைகளை கொடுக்கும் போது தமது ஆதரவை கொடுப்பார்கள். ஆனால் பொதுவாக இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து நாம் அறிந்து வந்து நாட்டின் அதிகாரத்தை தங்கள் கையில் வைத்துக்கொள்ள தொடங்கியதே தமிழர்களுக்கு அதை விட்டுக்கொடுக்க கூடாது என்ற ஒரு அடிப்படையில்தான் தொடர்ச்சியாக செய்து கொண்டு வந்துள்ளார்கள்.

ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு எமக்கு அவசியம் நிச்சயமாக எமக்கு தேவையானது வடக்கு கிழக்கு இணைப்பு என்பது. தமிழர்கள் மட்டும் அங்கே குடிகொள்வது என்று அர்த்தம் இல்லை. அங்கு என்ன நடக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது கிழக்கு மாகாணத்தில் முன்னர் 5 வீதமானவர்கள் தான் சிங்களவர்களாக இருந்தார்கள் தற்போது 31 வீதம் கூடியுள்ளார்கள். பெரும்பானமை இனம் சிறிது சிறிதாக எமது பகுதிகளை எடுத்துக்கொள்கிறது.

இது தற்போது வடமாகாணத்திலும் நடக்கிறது. சிங்களவர்கள் மேல் குற்றம் சொல்லவில்லை அவர்களை வரவேண்டாம் என்றும் சொல்லவில்லை ஆனால் எமது உரித்துக்களை தந்த பின்னர் இவற்றை பார்க்கலாம், அது தரப்பட்டால் தான் எமது இடங்களை பரிபாலிக்க முடியும் இல்லையானால் எமது இடங்கள் பறிபோய்விடும்.

வடக்கு கிழக்கு இணைப்போடு சமஷ்டி முறையில்சுயாட்சி எமக்குதரப்பட வேண்டும்அது தரப்படாவிட்டால் மீண்டும் பெரும்பான்மை இனத்தின் ஆட்சியில், அதிகாரத்தின் கீழ் நாம் இருக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

எனவே சமஷ்டி, வடக்கு கிழக்கு இணைப்பு இவை இரண்டும் அத்தியாவசியமாக இருக்கிறது அது இல்லை என்றால் நிரந்தர தீர்வு வர முடியாது என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## வயோதிபர்களை...

மானது நேற்று அதிகாலை சுமார் ஒரு மணியளவில் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தன்கேணி பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

நேற்று அதிகாலை வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டச்சு வீதி சித்தன் கேணி பகுதியில் வசித்து வரும் வயதான இருவரின் வீட்டுக்குள் நுழைந்த சிலர் அங்கிருந்த இருவர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இவ்வாறு தாக்குதல் நடத்திய பின்னர் அவர்களது வீட்டில் இருந்த பெறுமதியான நகைகள், பணம் மற்றும் ஏனைய பொருட்களை திருவடிச் சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த வீட்டில் இருந்த வயதான பெண்ணினது காதில் இருந்த தோடுகள் போன்றவற்றையும் அறுத்து எடுத்து சென்றுள்ளனர். இச் சம்பவத்தையடுத்து படுகாயமடைந்த குறித்த இருவரையும் அயலவர்கள் சங்கானை வைத்தியசாலையில் சேர்ப்பித்திருந்தனர். இதன்படி சிதம்பரநாதன் தேவஞானி, மற்றும் சின்னையா சிதம்பரநாதன் ஆகிய இருவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்த வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்றுக்காலை சம்பவ இடத்திற்கு மோப்ப நாய்களை கொண்டு சென்று விசாரணைகளை நடத்தியிருந்தனர். இதன்போது சம்பவம் நடைபெற்ற வீட்டிற்கு அண்மையாக இருந்த நபரொருவரை பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் அழைத்துச் சென்றுள்ளனர். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,17)

## பேஸ்புக் குறித்...

100 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை கணினி அவசரத்தயார் நிலைக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அப்பிரிவின் பாதுகாப்புப் பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவிக்கையில்,

போலியான பேஸ்புக் கணக்குகள் தொடர்பிலேயே அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 2016ஆம் ஆண்டு, போலியான பேஸ்புக் கணக்குகள் தொடர்பில், 2 ஆயிரத்து 200 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றமை சுட்டிக் காட்டத்தக்கது. (செ-11)

## இளைஞன் மீது...

தன்று இரவு 10 மணியளவில் நவாலி சிந்தாமணி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள பலசரக்கு கடை ஒன்றுக்கு, இரு மோட்டார் சைக்கிள்களில் 6 பேர் கொண்ட குழுவினர் வந்துள்ளனர். அவர்கள் அனைவரும் துணிகளால் தமது முகத்தை மறைத்த வண்ணமே இருந்துள்ளனர்.

கடைக்கு வந்த குழுவினர் அடாவடியில் ஈடுபட்டவேளை கடை உரிமையாளர் கடையின் பின் பக்கத்தால் தப்பித்து ஓடியுள்ளார். அவ்வேளையில் கடையில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் அகப்பட அவரை வாள்களால் வெட்டிவிட்டு அந்த கும்பல் தப்பிச்சென்றுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் சத்தியதாசன் ராஜநேசன் (வயது24) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த பிரஸ்தாப இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.


மேற்படி சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை குறித்த சம்பவ தினத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கடை உரிமையாளரின் தொலைபேசிக்கு வைபர் செயலி மூலம், அழைப்பு ஒன்று விடுத்து கப்பம் கேட்டு மிரட்டியுள்ளார்கள் என்றும் விசாரணையின் போது கடை உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (செ-4-9)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை (துரையர்)-சங்கரப்பிள்ளை

**(முன்னாள் இலட்சுமி ஸ்ரோர் உரிமையாளர்-சங்கானை)**



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கனடாவில் 02.05.2017 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (சி-8451)

தகவல்:-மகன் சங்கரப்பிள்ளை சிவலிங்கம்
(இலட்சுமி ஸ்ரோர் உரிமையாளர்-சங்கானை)

## தேர்தலை நடத்...

அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ளடளஸ்.

பிரதேச சபைகளின் ஆயுட்காலம் நிறைவடைந்து எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகவுள்ளன.

இந்த நிலையில், அரசாங்கம் இனிமேலும் தாமதிக்காமல் தேர்தலை நடத்த வேண்டும். இல்லாவிட்டால், மே தினத்திற்கு காலி முகத் திடலுக்கு கொண்டுவந்த கூட்டத்தைவிட பாரிய மக்கள் வெள்ளத்தை கொழும்புக்கு கொண்டுவருவோம்.

தேர்தலை நடத்தாமல் பிற்போடும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை முற்றுகையிட்டு. தேர்தலை உடனடியாக நடத்துமாறு வலியுறுத்துவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (செ-11)

## தாயும் மகளும்...

செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்திற்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய இந்த கொலைகள் தொடர்பான தகவல்களை நேற்று மதியம் கண்டறிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

72 வயதான வயோதிப பெண்ணும் கர்ப்பிணியான 32 வயதான அவரது மகளுமே இவ்வாறு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரு பெண்களும் கொலை செய்யப்பட்டிருந்த வீட்டில் உள்ள அலுமாரிகள் அனைத்தும் சூறையாடப்பட்டு காணப்பட்டதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட வயோதிப பெண் சூரியவெவ பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் காரியவசம் என்பவரின் தாயார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட கர்ப்பிணி பெண்ணின் கணவர் அம்பாந்தோட்டை தொழில்நுட்ப கல்லூரிக்கு பாடநெறிக்காக சென்றுவிட்டு வீடு திரும்பிய போது வீட்டின் முன்பக்க வாசல் கதவு திறந்து காணப்பட்டுள்ளது.

வீட்டுக்குள் சென்று பார்த்த போது மனைவியும், மாமியாரும் கொலை செய்யப்பட்டு கிடந்ததாக கர்ப்பிணி பெண்ணின் கணவரான ஜயசிங்க கோரளே ஆராச்சிகே சம்பத் என்பவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் இவ் இரட்டைக் கொலை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## மின்சார தேவை...

மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவள அமைச்சு தெரிவித்துள்ளது.

நிலைமைக்கேற்ப அதியுயர் அழுத்தமுடைய மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துவதற்காக பதிவு செய்துள்ள தொழிற்சாலைகளுக்கு நேற்றுத் தொடக்கம் அந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி மின் உற்பத்தியை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஸன ஜயவர்தன குறிப்பிட்டார்.

மேலும் நாட்டின் நாளாந்த மின்சார தேவை பத்து வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவள அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதுவரை 250 இற்கும் மேற்பட்ட பாவனையாளர்கள் தன்னியக்க மின்பிறப்பாக்கி இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்காக தங்களை பதிவுசெய்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதனடிப்படையில் 500 மெகா வோட்டுக் கும் அதிகமான மின்சார அலகுகளை பிறப்பாக்கம் செய்வதற்கு இயலுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (செ-11)


**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

• அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(சி-8438)

**Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்**

சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.

சுரவீனா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1962 | 2016 |
| 02 | 05 |
| 10 | 14 |

அமரர் **நாகேந்திரம் விக்கினேஸ்வரன் (விக்கி)**

**திதி 2017.05.03**

சின்னதொரு புன் சிரிப்பு
அமைதியான பேச்சு
எளிமையின் வடிவு எல்லாம்
உங்களிடத்தில் கண்டோம்
எமை உருகியழ வைத்து விட்டு
எங்கே சென்றீர்!

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(8885)


**நீங்களும் ஆசிரியராகலாம்**
**டிப்ளோமா கற்கை நெறிகள்**

Diploma in Abacus
IQ Teacher Training
(Tamil Medium)



சுயமாக நீங்கள் அபக்கஸ் கற்பித்து உங்கள் திறமைக்கேற்ப மாதாந்தம் 30000/= ஆயிரத்திற்கு மேல் சம்பாதிக்க கூடிய கற்கைநெறி

Diploma in Pre-school Teaching (English Medium)

Diploma in Primary Teaching (English Medium)

Diploma in English Teaching (English Medium)

Teaching Knowledge Test
(Teaching Award from University of Cambridge) (English Medium)

ENGLISH LANGUAGE TEACHING COLLEGE
மீசாலைச் சந்தி, மீசாலை 0769777497
ஆரம்பம் 06-05-2017 சனிக்கிழமை
கிளிதொழில் நுட்பக்கல்லூரி, A9 வீதி கிளிநொச்சி 076 5250 131
(8858)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

• 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவைகள்
ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்
• உணவுப் பொருட்கள், உடைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடல் உணவுகள், மருந்துப் பொருட்கள் என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.

11kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgற்கான விசேட சலுகைக் கட்டணம்

லண்டன் 500/-, ஜேர்மன் 600/-, பிரான்ஸ் 650/-, சுவிஸ் 800/-, கனடா 950/- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்



திருமுருகன் கொம்நெற் (pvt) Ltd
271A, K.K.S, வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021 222 7835, 077 755 4528
கிளைகள்
No. 46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
No. 18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை.
பிரதான வீதி, பருத்தித்துறை.
57, புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி.
(8841)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.